1277

THE

# LOCAL HISTORY & CIVICS

## TRICHINOPOLY DISTRICT

*With a special Chapter on the Benefits of the British Rule*

ADAPTED

TO THE

NEW EDUCATIONAL CODE

BY

C. R. VENKATARAMA AIYAR,

*Asst., High School, Srirangam.*

29 JUN 1923

## ஜில்லா சரித்திரமும், சிவிக்ஸும்

## திருச்சிராப்பள்ளி ஜில்லா

*Approved by the Director of Public Instruction, Madras.*

**SEVENTH EDITION**

PRINTED AT THE

SRI VANI VILAS PRESS,

SRIRANGAM.

1923.

Copyright Registered. [Postage: 6 pies.

JB
V2 A
N23

# THE LOCAL HISTORY & CIVICS.

TRICHINOPOLY DT.

BY

*C. R. VENKATARAMA IYER,*

*Teacher, High School, Srirngam.*

*Approved by the Director of Public Instruction, Madras.*

(*vide* The Fort St. George Gazette, Page 431.

Dated 1—6—1915)

179892

# முகவுரை.

இப்போதைய புது ஏற்பாட்டின்படி, சரித்திர பாடம் போதிக்கும் முறையைச், சென்ற இரண்டுவருஷகாலமாய் திருச்சியில்கூடிய வித்தியா இலாகா கான்பரன்ஸில் சொல்லி நான்காவது வகுப்பிற்கு அந்தந்த ஜில்லாவை ஆதிமுதல் இன்று வரையில் அரசர்களாண்டதை கதாரூபமாய்ப் போதிக்கவேண்டுமென்று ஒரு ஸிலபஸை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதை யனுசரித்தே நான் சென்ற வருஷம் ஸ்ரீரங்கம் ஹைஸ்கூலில் நான்காவது வகுப்பிற்குப் போதித்தேன். இதுவரையிலும் நமது திருச்சி ஜில்லா சரித்திர புஸ்தகம் ஒருவரும் எழுதாததால், எல்லோருக்கும உதவும்படி இப் புஸ்தகம் எழுதப்பட்டது. இதை எழுதுவதில் மாதிரிகாட்டி உதவிசெய்த திருவனந்தபுரம் காலேஜ் சரித்திர உபந்நியாஸராகிய ம-ள-ள-ஸ்ரீ, K. V. இரங்கசாமி அய்யங்கார் M.A., அவர்களுக்கும், ஒழுங்குபடுத்திய ஸ்ரீரங்கம் ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் மகா-ள-ள-ஸ்ரீ M. C. ராஜகோபால் நாயுடு B.A., L.T., அவர்களுக்கும், இதை மேல்பார்வையிட்ட ஸ்ரீரங்கம் ஹைஸ்கூல் தமிழ் பண்டிதர் பிரம்மஸ்ரீ குரு சுப்பிரமணிய ஐயர் அவர்களுக்கும நான் வந்தனம் செய்கிறேன். இதில் ஏற்படும் பிழைகளைப் பொறுத்துத் தெரியப்படுத்தினால் மறுபதிப்பில் திருத்தி வெளிப்படுத்துவேன்.

The University Lecturers' History Syllabus for the Fourth Standard in the Trichinopoly District.

**Stories about :—**

I. The Rock Fort of Trichinopoly—திருச்சி மலைக் கோட்டை.
II. The Woraiyur Temple—உறையூர் கோயில்.
III. The Cauvery Dam—காவேரி கல்லணை.
IV. The Pallavas' Cave—பல்லவ குகை.
V. The Gilt Kalasam of the Srirangam Temple—ஸ்ரீரங்கம் கோயில் தங்க விமானம்.
VI. The Rayagopuram—ராய கோபுரம்.
VII. The Nayak group—நாயகர் குடும்ப பொம்மைகள்.
VIII. The audience hall of Mangammal—மங்கம்மாள் கொலு மண்டபம்.
IX. The Golden Rock—பொன் மலை.
X. The Clock Tower of Trichinopoly—திருச்சி மணிக் கூண்டு.

# இரண்டாம் பதிப்பு முகவுரை.

1910-ஆம் முதல் திருச்சி ஜில்லாவுடன் கரூர், நாமக்கல் தாலூகாக்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனால் இந்த ஜில்லா சரித்திரம் மாறுபடாது. சேர ராஜ்யம் என்பது மேற்குத் தொடர்ச்சி மலைகளின் மேற்பாகமாகிய திருவாங்கூர், கொச்சி, மலையாளமும் சேலம், கோயம்புத்தூர் ஜில்லாக்களின் மேற்பாகமும், என்றும் இதற்கு தலைநகர் கரூர் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது சேர்ந்த தாலூகாக்கள் சேரராஜ்யத்தைச் சேர்ந்தவை அல்ல என்பதற்குக் காரணங்கள்.

(1) கரூர் என்னும் தலைநகர் இதுவல்ல. மேற்குத் தொடர்ச்சி மலையில் பெரியாறு உற்பத்தியாகு மிடத்திற்கு சற்று மேற்புறமிருக்கும் கரூர் என்பது. இதில் இப்போதும் புராதன கோட்டைகள் அழிபட்டுக் காணப்படுகின்றன.

(2) சோழராஜ்யத்தைச் சேர்ந்த 9 மண்டலங்களில் (ஜில்லாக்களில்) ஆதி ராஜராஜ மண்டலம் என்னும் கொங்க நாட்டில் சேலம் கோயம்புத்தூர் ஜில்லாக்களின் கீழ்பாகம் சேர்ந்தது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

(3) நாமக்கல் தாலூகாவில் ஓடும் கரைபோட்டான் ஆறு சேரராஜ்யத்தின் கிழக்கு எல்லை. நாமக்கல் தாலூகாவில் முக்கால் பங்கு இந்த ஆற்றின் கீழ்பாகம். இது சோழராஜ்யத்தைச் சேர்ந்தது.

(4) கிகரிஷி சோழமண்டலத்தில் சேலத்தின் வடபாகம் சேர்ந்தன.

(5) பெரிய புராணத்தில் எறிபத்தநாயனர் சரித்திரத்தில், அப்போதைய சோழ ராஜதானியாகிய கரூரில் ஆண்டு கொண்டிருந்த புகழ்ச் சோழராஜனுடைய பட்டவர்த்தன யானை சிவனடியாருக்குத் தீங்கு செய்ததாகவும் எறிபத்த நாயனர் தீங்கிழைத்தவர்களைக் கொன்றதாகவும், அதற்காக அத்தலை நகரிலுள்ள சோழராஜன், நாயனரை மன்னிப்பு கேட்டதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

(6) சுமார் 800 வருடங்களுக்கு முன் நம்மையாண்ட குலோத்துங்க சோழன் காலத்தில் கம்பன் அவரைப்பற்றி அடியிற் கூறும் பாடலை பாடியிருக்கிருர்.

"காதமிருபத்துநான் கொழியக் காசினியை
ஓதக்கடல கொண்டொளித்ததோ—மேதினியில்
கொல்லிமலை நாடாளுங் கொற்றவா நீ முனிந்தால்
இல்லையோ எங்கட்கிடம்."

(7) கரூர் தாலூக்காவின தலைநகராகிய கரூர் என்னும் (ஆநிலையில்) ஆதிகாலத்தில் சுயம்புவாகத் தோன்றிய பசுபதீச்வரன் கோவிலில் இப்போது காணப்படும் சிலாலிகிதங்கள் சோழருடையதாக காணப்படுகின்றனவேயன்றி சேரருடையது ஒன்றுமில்லை. மேற்கூறிய காரணங்களால் கரூர் நாமக்கல் தாலூகாக்கள் ஆதிமுதல் சோழராஜ்யத்தைச் சேர்ந்திருந்து, இந்தஜில்லாவடைந்த மாறுதல்களையடைந்து வந்தன. ஆனல் விஜயநகர ராஜ்யகாலத்தில் மைசூர் நாயகர் ஆளுகைக்குட்பட்டிருந்தது. திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களை மதுரை நாயகரிடமிருந்து ஆற்காடு நபாபு அடைந்த காலத்தில், மைசூர் நாயகரின் ராஜ்யத்தை ஹைடர் என்னும் மகம்மதியன் அபகரித்து ஆண்டார். திரு

ச்சி ஜில்லாவை 1801ளு ஆற்காடு நவாபினிடமிருந்து இங்கிலீஷ்காரர் அடைவதற்கு 9 வருஷங்களுக்கு முந்தி (1792 A. D.) மைசூரிலாண்ட திப்புசுல்டானுடன் இங்கிலீஷ்காரர் போர் புரிந்து மைசூர் ராஜ்யத்தை மீட்டு, பழைய ராஜவம்சத்தாருக்கு இப்போதிருக்கும் மைசூரைக் கொடுத்து தாங்கள் பட்ட சிரமத்திற்கும் செலவிற்கும் அந்த ராஜ்யத்திற்கு சுற்றிலுள்ள ஜில்லாக்களை அடைந்தார்கள். இப்போது சென்ற வருஷமுதல் கரூர், நாமக்கல் தாலூகாக்களை நமது பழைய திருச்சி ஜில்லாவுடன் சேர்த்திருக்கிறார்கள்.


*N. B.*—உபாத்தியாயர் திருச்சி ஜில்லா சரித்திரத்தை போதிக்கையில் சிலபவில் கண்ட பொருள்களையும், கட்டிடங்களையும் கூடுமானவரையில் நேரில் காண்பிக்க வேண்டும். திருச்சி மலைக்கோட்டைமேல் ஏறிப்பார்த்தால் அநேகமாய் நேரில் பார்க்கலாம்.

## மூன்றாம் பதிப்பு முகவுரை.

இப்பதிப்பில், ஆங்கில அரசாக்ஷியால் உண்டானநன்மைகளை சேர்த்திருக்கின்றன. இரண்டாம் பதிப்பைவிட மூன்று படங்கள் அதிகமாய்ச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

1914ௗ ஜுலை } 1உ

C. R. V.



திருச்சி மலைக்கோட்டை.

# திரிச்சிராப்பள்ளி ஜில்லா சரித்திரம்.

---

## முதல் பாகம்.

29 JUN 1923

---

### 1. திருச்சி மலைக்கோட்டை.

1. **திரிசிரபுரம்.**—அநேக ஆயிரம் வருஷங்களுக்கு முன் நாம் வசிக்கும் ஜில்லா முழுவதும் காடுகளால் அடர்ந்திருந்தது. மலைகளில் துஷ்டமிருகங்களேயன்றி நாகரீகமற்ற காட்டுமனிதர்கள்போன்ற ராக்ஷஸர்களும் குடி கொண்டிருந்தார்கள்: ஆனால் காவேரியாற்றின் கரை யோரங்களில், நமது முன்னோர்களாகிய ரிஷிகள் தங்கள் சிஷர்களுடன் பர்னசாலை (தழையால்வேய்ந்தகுடிசைகளில்)வசித்துக்கொண்டிருந்தார்கள். இதேகாலத்தில்இலங்கைத்தீவில் இராவணன் என்னும் ராக்ஷஸன் அரசாட்சி செய்துவந்தான். இவனுக்கு கும்பகர்னன், விபீஷணன் என்னும் இருவர் சகோதரர்கள். இந்த இராவணனுக்கு சகோதர முறை யுள்ள திரிசிரன் (மூன்று தலைகள் உள்ளவன்) என்னும் ராக்ஷஸன் நமது ஜில்லா முழுவதையும் தனது நாடாக்கித் தன் பரிவாரத்துடன் காடுகளில் திரிந்து ஆற்றோரங்களில் வசித்த ரிஷிகளுக்கு உபத்திரவம் செய்து வந்தான். அக்காலத்தில் திரிச்சிராப்பள்ளி மலைக்கோட்டை ஒரு அழகிய கருங்கற்குன்றாக இருந்ததேயன்றி இப்போது நீங்கள்பார்க்கிறமாதிரியாகக் கோயில்களும் மண்டபங்களும் தெருக்களும் இதைச் சுற்றிக் கோட்டையும்

இல்லை. இக்குன்று, ஒரே கல்லாக உயர்ந்திருந்தபடியால், இந்துக்கள் புராணங்களில் மேருமலையின் சிகரம் உடைந்து இங்ஙனம் வீழ்ந்தது என்று சொல்லியிருக்கிறார்கள். இக்குன்றிலிருந்து திரிசிரன் சிவனைக்குறித்துத்தவம் செய்தான். இவன் தவத்திற்குசந்தோஷித்துப் பரமசிவன்பிரத்தியக்ஷமாகி அவனுக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்தார். பிறகு குன்றின் மேல் கோயில் கட்டித் தாயுமானவர், அம்மன், பிள்ளையார் முதலியபிம்பங்களைப் பிரதிஷ்டைசெய்து பூசித்து வந்தான். இவ்விதமாய் ஆதிகாலத்தில் நமது ஜில்லாவில் தலைநகரில் திரிசிரன் வசித்துவந்தபடியால் அதுமுதல் அது 'திரிசிரபுரம்" எனப்பெயர்பெற்றுத் தலைப்பட்டணமாக இருக்கிறது. ஆகையால் இந்த ஜில்லாவுக்குத் திரிசிராப்பள்ளி ஜில்லா என்று பெயரிட்டார்கள். இப்பெயரையே ஜனங்கள் திரிச்சினாப்பள்ளி என்று மருவி வழங்குகிறார்கள்.

2. **திருவானைக்கா:**—இது திரு ஆனைக்காவல் என்று சொல்லப்படுகிறது. இது காவேரி கொள்ளிடம் இரண்டிற்கும் இடையிலுள்ள தீவுபோன்ற பூபாகத்தின் பெயர். இத்தீவு முழுவதும், இப்போதிருப்பதைப்போல் முற்காலத்தில் வீடுகளில்லாமல் ஆனைகள் நிறைந்த அழகிய காடாக இருந்தது. இக்காரணத்தால்இதைத் திரு ஆனைக்கா என்று பெயரிட்டார்கள். இக்காட்டில் ஒரு அழகிய நாவல்மரம் உண்டு. இதனடியில் ஒரு ரிஷி தவம்செய்தார். இவர் தவத்திற்குச் சந்தோஷித்துப் பரமசிவன்பிரத்தியக்ஷமானார். அங்ஙனம் பிரத்தியக்ஷமானவர், பின் அந்தரிஷியின் இஷ்டப்படி அம்மரத்தினடியில் சிவலிங்கரூபமாக நின்றுவிட்டார். அதுமுதல் இக்காட்டில் தவம் செய்த மகா ரிஷிகள் அந்த லிங்கத்தைப் பூசித்து வந்தார்கள். இப்போதும் அந்த நாவல்

மரம் அப்படியே இருக்கிறது. அதைப் பார்த்தாலும் அநேக வருஷங்கள் சென்றமரம் என்று நமக்குத்தெரிகிறது. நாவல் மரமும் (ஜம்பு விருக்ஷமும்) ஈசுவரனும் இருக்கிற காட்டாகை யால் அது ஜம்புகேச்வரம் எனவும், ஆனைகள் ஏராளமாய் வசித்துவந்தபடியால் திருஆனைக்கா (கெஜாரண்யம்) எனவும் பெயர் பெற்று, இப்போது திரு ஆனைக்காவல் என மருவி வழங்குகிறது. இக்கோயிலைச் சோழ ராஜாக்களில் கோச் செங்கட்சோழர் என்பவர் கட்டினார் என்று கோயில் மதில் களில் எழுதப்பட்டிருக்கிறது. சில வருஷங்களுக்கு முன் நாட்டுக்கோட்டை செட்டிகளின் உதவியால் கானாடுகாத்தான் சா. ரும. சித. சிதம்பர செட்டியார் திருப்பணிசெய்து முன் னிலும் மேன்மையாகப் புதுப்பித்திருக்கிறார்.

3. **ஸ்ரீரங்கம்:**—முன் பாடத்தில் சொல்லிய திரு ஆனைக்கா என்னும்க்ஷேத்திரத்தில் ஸ்ரீரங்கநாதர் வந்தபிறகு அப்பாகத்திற்கு ஸ்ரீரங்கம் எனப் பெயர் வந்தது. ஸ்ரீரங்க நாதர் இவ்விடம் வந்த விதம் அடியிற் கூறிய கதையால் விளங்கும்.

**இராமாயணம்:**—இந்தியாவின் வடபாகத்தில் அயோத்திமாநகரமென ஒரு பட்டணமுண்டு. இந்த நகரத்தை தசரதர் என்னும் சக்ரவர்த்தி பல்லாண்டு ஆண்டு வந்தார். இவருக்குக் கோசலை, சுமித்திரை, கைகேசி என மூவர் பட்ட மகிஷிகள். இந்தச் சக்ரவர்த்திக்குக் குழந்தைகளில்லாததால் புத்திரகாமேஷ்டி என்னும் ஒரு யாகம் செய்தார். அக்காலத் தில் பூலோகத்திலுள்ள நமது முன்னோர்கள் முன் சொல்லிய படி இராக்ஷஸர்களால் உபத்திரவம் அடைந்து வந்தபடி யால் பகவானை ஸ்தோத்திரம் செய்தார்கள். அது கண்டு விஷ்ணு மூர்த்தி ஜனங்களும் தேவதைகளும், இராக்ஷஸர்க

ளால் படும்கஷ்டத்தை நிவர்த்திக்கவும், தசரதர்யாகத்திற்கு அநுக்கிரகம் செய்யவும் யோசித்து, இராவணன் மனிதர், குரங்குகள் தவிரவேறு எவர்களாலும், தனக்கு மரணமுண்டாகக்கூடாது என வரம் வாங்கியிருந்தபடியால் தேவதைகளைச் சுக்கிரீவன் முதலிய வானரங்களாய் அவதரிக்கச் சொல்லி உத்தரவு செய்துவிட்டு, தாமே தசரதருக்கு ஸ்ரீராமர், லட்சுமணர், பரதர், சத்ருக்னர் எனநான்குபிள்ளைகளாக அவதரித்தார். இவர்களுள் ஸ்ரீராமர் ஜனகராஜனுக்கு அயோநிதியாய்ப் பிறந்த சீதையென்னும் ஒரு தெய்வப்பெண்ணை மணம்புரிந்தார். தசரதருக்கு வயதாகிவிட்டபடியாலும் ஸ்ரீராமர் இராஜ்யத்தையாளத்தக்க நிலையிலிருந்தபடியாலும், தசரதர் ஸ்ரீராமருக்குப் பட்டங்கட்ட நிச்சயித்தார் இதை, யறிந்த கைகேசி, துர்போதனை பெற்று, தசரதர் தனக்கு வேண்டும்போது கொடுப்பதாகச் சொன்ன இரண்டு வரங்களை நிர்ப்பந்தம் செய்து பெற்றுக்கொண்டு தன் குமாரன் 14 வருஷம் அயோத்தியை ஆளும்படிக்கும், ஸ்ரீராமர் 14 வருஷம் காட்டில் வசித்துப்பிறகு பட்டம் கட்டிக்கொள்ளும்படிக்கும், கேட்டுக்கொண்டாள். சத்தியத்திற்குக் கட்டுப்பட்டு ஸ்ரீராமர் காட்டுக்குச்சென்றார். இவருடன் அவர் மனைவியாகிய சீதையும், தம்பியாகிய லட்சுமணரும் சென்றார்கள். இதனால் இராமருக்கு அதிக சந்தோஷமுண்டாயிற்று. ஏனெனில் தான் உத்தேசித்து அவதரித்த காரியம் காட்டில் சென்று ராக்ஷஸர்களைக் கொன்று பூலோகத்திலுள்ள சகல சாதுக்களுக்கும் பயத்தை நிவர்த்திக்க வேண்டியதாகையால், ஸ்ரீராமர் சந்தோஷமாய் காடுகளில் வசித்தார். இவ்விதமாய் அயோத்தியைவிட்டு காட்டை அடைந்து ராக்ஷஸர்கள் நிறைந்த தென்பாகத்திற்கு வந்து ரிஷிகளுடன் தானும் ஒரு

பர்ணசாலை கட்டிக்கொண்டு சுகமாய் வசித்தார். அப்போது ஒரு நாள் இராவணன் சகோதரியாகிய சூர்ப்பணகை என்பவள் ஸ்ரீராமரின் அழகைக்கண்டு மயங்கி தன்னைக் கலியாணம் செய்துகொள்ளும்படி ஸ்ரீராமரை வேண்டினாள். ஸ்ரீராமர் தமது மனைவியைத்தவிர இதர ஸ்திரீகளைக் கண்ணாலும் பார்க்ககூடாது என்னும் நியாயத்தையும், மற்ற தர்மங்களையும் தாமே உலகத்தாருக்கு அனுஷ்டித்துக்காட்ட அவதரித்த மகா புருஷராகையால், தாம் அவளைக் கலியாணம் செய்துகொள்ள முடியாதென்று பல நியாயங்களைச் சொல்லியும் கேளாததால் மூக்கை அறுத்து அனுப்பினார். இப்படி தனது எண்ணம் முடியாததால், சூர்ப்பணகை நமது காடுகளில் வசித்த திரிசிரனிடம் வந்து தனக்கு நேர்ந்த மானபங்கத்தைத் தெரிவித்து ஸ்ரீராமரைக்கொல்லும்படி வேண்டிக்கொண்டாள். தரிசிரன் தன் பரிவாரங்களுடன் சென்று ஸ்ரீராமரை எதிர்த்தான். ஸ்ரீராமர் ராக்ஷஸர்களைக்கொன்று நமது திரிசிராப்பள்ளி காட்டில் வசிக்கும் ரிஷிகளுக்கு சந்தோஷத்தை உண்டாக்கினார். திரிசிரன் இறந்தபிறகு சூர்ப்பணகைக்கு வேறு துணைவர் இவ்விடமில்லாமல் எல்லோரும் இறந்துபோய்விட்டபடியால், இலங்கைக்குச்சென்றாள். ராவணன் இவளது மூக்கு அறுப்புண்டிருப்பதற்குக் காரணம் என்னவென்று இவளை கேட்டபோது நடந்தபடி சொல்லாமல் திரிசிரபுரத்திற்குச் சமீபத்தில் தான் வசித்த காலத்தில் ஒரு அழகிய பெண்ணைக்கண்டு அவளை யெடுத்து இராவணனுக்குக் கொடுக்க உத்தேசித்து எடுக்க முயன்றதைக் கண்டுகொண்ட அப்பெண்ணின் புருஷன் இராமன் என்பவன் தன் மூக்கையறுத்துவிட்டதாயும், பிறகு திரிசிரனிடம் சொல்லிக் கொண்டதாயும், அவன் தன் பரிவாரங்களுடன் சென்று

இராமருடன் சண்டை செய்ததில் ஸ்ரீராமர் எல்லா ராக்ஷஸர்களையும் கொன்றுவிட்டபடியால் தனக்கு உதவியில்லாமல் போய் இலங்கைக்கு வந்ததாயும் சொல்லி முறையிட்டுக் கொண்டாள். இதைக்கேட்ட இராவணன் சீதையைத் தூக்கி வரவும், ஸ்ரீராமரைக் கொல்லவும், திரிசிரபுரக் காட்டிற்கு வடக்கே சென்று ஸ்ரீராமர் பர்ணசாலையை விட்டுப்போகும் தந்திரம் செய்து தான் சன்னியாஸிபோல் வேடம்பூண்டு சீதையிடம் சென்று அவளைத் தூக்கிவந்து இலங்கையில் அசோகவனத்தில் காவலில் வைத்தான். பிறகு வெளியே சென்றிருந்த ஸ்ரீராமர், லட்சுமணர், திரும்பிவந்து பர்ண சாலையில் சீதையில்லாமல் போய்விட்டதைக்கண்டு காடுகாடாகச் சீதையைத் தேடிச் சென்றார்கள். அப்போது நமது ஜில்லாவின் வடக்கேயுள்ள கொல்லிமலையில் (கிஷ்கிந்தையில்) சுக்கிரீவன் தனது மந்திரியாகிய அனுமான் முதலிய வானரங்களுடன் இருப்பதைக்கண்டு, அவன் தமையனாகிய வாலியைக்கொன்று சுக்கிரீவனுக்கு கிஷ்கிந்தையை பட்டங்கட்டினார். (வாலியைக்கொன்ற இடம் வாலிகொண்டாபுரம் என்று நமது ஜில்லா பெரம்பலூர் தாலூகாவிலிருக்கிறது.) இப்படிப்பட்டமடைந்த சுக்கிரீவன், தனது மந்திரியாகிய அனுமானைக்கொண்டு சீதையின் இருப்பிடமறிந்து, இலங்கைக்கு ஸ்ரீராமலட்சுமணர்களையும், தனது பரிவாரத்தையும் அழைத்துக்கொண்டு சென்றான். மதுரை ஜில்லாவிற்கு கிழக்கே சமுத்திரக்கரை வரையில் சென்றார்கள்; பாம்பன் என்னுமிடத்திற்குத் தென்கிழக்கே சமுத்திரநடுவில் இலங்கைத் தீவு இருக்கிறபடியால், சமுத்திரத்தில் வானரங்களைக்கொண்டு அணைபோட்டு இலங்கைக்குச் சென்றார்கள். இப்படி இராமர் வானரங்களைச்சேனையாக்கி வந்ததையறிந்து இராவணன்

தன் சேனைகளைச் சண்டைக்குத் தயார் செய்தான். இராவணன் தம்பியாகிய விபீஷணன் சீதையை விட்டுவிடும்படிக்கு இராவணனுக்கு பலவிதமாய்ப் புத்தி சொல்லியும் கேளாததால், ஸ்ரீராமரிடம் வந்து தன்னைக் காப்பாற்றும்படி சரணமடைந்தான். ஸ்ரீராமன் அவனுக்கு அபயம் கொடுத்து அவன் துணையைக்கொண்டும், தமது சினேகிதனாகிய சுக்கிரீவன் படையைக்கொண்டும் இராவணனுடன் யுத்தம் செய்து சகல துஷ்டராக்ஷஸர்களையும் கொன்று கடைசியில் இராவணனையுங் கொன்றார். இராவணனைக் கொன்றபிறகு விபீஷணருக்கு இலங்கைப் பட்டம் கட்டி அசோகவனத்திலிருந்த சீதையை யடைந்தார். ஸ்ரீராமர் அவதரித்த காரியம் முடிந்ததும் திரும்பி அயோத்திக்குப் பிரயாணமானார்.

இவருடன் விபீஷணர், சுக்கிரீவர் முதலியவர் புறப்பட்டார்கள்; பதினன்கு வருஷம் முடிந்ததும் அயோத்திக்குச் சென்று ஸ்ரீராமர் பட்டாபிஷேகம் செய்துகொண்டார். பட்டாபிஷேகம் முடிந்ததும் அவ்விடம் வந்திருந்த சகல தேசமன்னர்களுக்கும் தக்க மரியாதைசெய்து அனுப்பினர். அப்போது விபீஷணர் தாம் எப்போதும் ஆராதனை செய்ய ஸ்ரீரங்கநாதஸ்வாமியைத் தனக்கு அனுக்கிரகம் செய்யும்படி பிரார்த்தித்தார் இந்தக்கடவுளை இக்ஷ்வாகு முதலிய சூரிய வம்சத்து அரசர்கள் அயோத்தியில் வைத்துப் பூசித்து வந்தார்கள். அப்படிப்பட்ட இரங்கநாதரை விபீஷணருக்கு இராமர் கொடுத்தார். அதை இலங்கைக்குக் கொண்டுபோய் பிரதஷ்டை செய்து ஆராதிக்கும்படிக்கும், நடுவில் கீழே வைக்காமல் கொண்டுபோகும்படிக்கும், இராமர் உத்தரவு செய்தார். விபீஷணர் ஸ்ரீரங்கநாதரை எடுத்துக்கொண்டு இலங்கைக்குப் பிரயாணமானர். போகும் வழியில் காவேரி

கொள்ளிடம் இரண்டிற்கும் நடுவிலுள்ள திரு ஆனைக்காவின் மேற்புறம் சந்திரபுஷ்கரணிக்கரையில் ரிஷிகள் தவம் செய்து கொண்டிருந்தபடியால் இவ்விடம் நின்று ரிஷிகளைச் சேவித்தார். அப்போது மத்தியான காலமாகிவிட்டபடியால் புஷ்கரணியில் ஸ்நானம் செய்து அனுஷ்டானத்தை முடித்துக் கொண்டுபோகும்படி ரிஷிகள் கேட்டுக்கொண்டார்கள். அப்போது கையிலுள்ள இரங்கநாதரை ஒரு பிரம்மசாரியிடம் கொடுத்துத் தாம் அனுஷ்டானம் முடித்துவருகிற வரையில் வைத்திருக்கும்படி கேட்டுக்கொண்டார். அந்தப்பிராமணச் சிறுவன் விபீஷணர் வருமுன் சந்திர புஷ்கரணிக்கரையில் வைத்துவிட்டுத் திரிசிரபுரம் போய்விட்டார். விபீஷணர் வந்துபார்க்கையில் பிரமசாரி தெற்கு நோக்கி ஓடிக் கொண்டிருந்தார். விபீஷணர் பின் தொடர்ந்தார். அந்த பிரமசாரி மலைக்கோட்டை உச்சிக்குச் சென்றார். விபீஷணரும் உடன் சென்று அவர் தலையில் ஒரு குட்டுப்போட்டார். இப்படி விபீஷணரால் குட்டுப்பட்ட பிரமசாரி பிள்ளையார் ரூபமாக மலையின் உச்சியில் அமர்ந்தார். அப்பிள்ளையாருக்கு உச்சிப்பிள்ளையார் எனப்பெயர் வந்தது. இப்போது பிள்ளையார் தலை பள்ளமாயிருக்கிறது. பிள்ளையார் கோயிலின் மேல்புறப்பாறையில் இரண்டு அடிச்சுவடுகள் கருப்பாய்த் தெரிகின்றன. இதை விபீஷணர் நின்றவிடம் என்று ஜனங்கள் சொல்லுகிறார்கள்: கடவுளே இம்மாதிரி ஏமாற்றினால் விபீஷணர் என்ன செய்யக்கூடும்? உடனே திரும்பிச் சந்திர புஷ்கரணிக்கரைக்கு விபீஷணர் வந்து இரங்கநாதரை எடுக்க முயன்றார். எடுக்க முடியவில்லை. விபீஷணருக்கு அதிக விசனமுண்டானது. அப்போது பகவான் பிரத்யக்ஷமாகித் தம்மைப் புஷ்கரணிக்கரையில் பிரதிஷ்டை செய்து பூஜி

க்கும்படிக்கும், அநேக ரிஷிகளுக்கு அனுக்கிரகம் செய்ய வேண்டித் தாம் இவ்விடம் இருந்தே எப்போதும் இலங்கையைப் பார்த்துக்கொண்டிருப்பதாயும், வருஷத்திற்கு ஒரு முறை தம்மையாராதித்துப் போகும்படிக்கும், ஆக்ஞாபித்தார். விபீஷணரும் அப்படியே விமானத்துடன் பிரதிஷ்டை செய்து பூஜித்துச் சென்றார். அதுமுதல் இவ்விடம் வசித்த ரிஷிகள் பூசித்துவந்தார்கள். ஸ்ரீரங்கநாதர் இவ்விடம் வந்தபிறகு திரு ஆனைக்காவலின்மேல்பாகம், ஸ்ரீரங்கம் என்று சொல்லப்படுகிறது. ஸ்ரீரங்கநாதர் இவ்விடம் வந்த காலத்தில் நமது நாட்டை ஆண்ட தர்மவர்மா என்னும் சோழராஜன் கோயில் மதில்களில் சிலவற்றைக்கட்டி உற்சவங்கள் நடத்தினார். திருச்சினாப்பள்ளிக்கு மேற்கேயுள்ள உறையூர் சோழராஜன் தலைநகர்.

II. உறையூர்க் கோவில்:—ஸ்ரீரங்கமிருந்து வருஷத்திற்கு ஒருநாள் ஸ்ரீரங்கநாதர் உறையூர் நாச்சியார் கோவிலுக்குப் புறப்பட்டுப் போகிறதை எல்லாரும் பார்த்திருக்கலாம் அல்லது கேள்விப்பட்டிருக்கலாம். இப்படிப் போகும் ஐதீகத்தைச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

முன் நீங்கள் படித்தபடி நமது ஜில்லாவில் ராக்ஷஸ பயம் நீங்கியவுடன் இப்போதிருக்கிற கள்ளர், மறவர்களுக்கு மூலபுருஷராகிய நாகர் என்னும் நாகரீகமற்ற ஜனங்கள் இந்த ஜில்லாவில் குடிகொண்டிருந்தார்கள். அப்போது வடதேசத்திலிருந்த ஆரியரல்லாத ஒரு நாகரீகமுள்ள ஜாதியார் தெற்கே வந்து, நாகர்களை யடக்கி ஆண்டார்கள். இப்படி வந்தவர்கள், சேர, சோழ, பாண்டியர்கள். இவரில் நமது ஜில்லாவையும் தஞ்சாவூர் தென்னாற்காட்டையும் அடைந்து உறையூரைத் தலைநகராகக் கொண்டவர் நம்மை யாண்ட—

சோழர். பாண்டியர்கள் மதுரை திருநெல்வேலியை அடைந்து மதுரையைத் தலைநகராகவும் சேரர் திருவாங்கூர், தென் கன்னடம், மலையாளத்தை அடைந்து கருவூரைத் தலைநகராகவுங்கொண்டு ஆண்டார்கள். கோயம்புத்தூர் ஜில்லாவில் போத்தனூருக்கு மேற்கே 8 மைல் தூரத்தில் மதுக்கரை (கோட்டக்கரை) என்னுமிடத்தில் இம்மூவர் எல்லையும் சந்திக்கிறது. இவ்விடம் ஒரு பழைய காலத்துகரை தெரிகிறது.

(சேரநாட்டு எல்லை)

வடக்குத் திசை பழனி வான்கிழ் தென்காசி
குடக்குத்திசை கோழிக்கோடாம்—கடற்கரையின்
ஓரமோ தெற்காகு முள்ளெண்பதின் காதம்
சேரநாட்டெல்லையெனச் செப்பு.

(பாண்டிய நாட்டு எல்லை.)

வெள்ளாறு அது வடக்காம் மேற்கு பெருவழியாம்
தெள்ளார் புனற் கன்னி தெற்காகும்—உள்ளார
ஆண்ட கடல் கிழக்கா மைம்பத்தறுகாதம்
பாண்டி நாட்டெல்லைப்பதி.

(சோழ நாட்டு எல்லை.)

கடல் கிழக்குத் தெற்குக் கரை பொரு வெள்ளாறு
குடதிசையிற் கோட்டைக்கரையாம்—வடதிசை
ஏணாட்டுப் பண்ணை யிருபத்து நாற்காதம்
சோணாட்டுக் கெல்லையெனச் சொல்.

ஸ்ரீரங்கம் எனப்பெயர் வந்தகாலத்தில் ஆண்ட அரசர் தர்மவர்மா என்று முன்பு நீங்கள் படித்திருக்கிறீர்கள் இந்தச் சோழராஜன் ஸ்ரீரங்கம் கோயில் திருப்பணிகள் செய்தார். இவர் திருச்சிராப்பள்ளிக்கு மேற்கேகாவேரியின் வடகரை

யில் குணசேகரம் என்னும் ஸ்தலத்தில் ஒரு விஷ்ணு ஆலயம் கட்டினார். இந்த தர்மசிந்தையுள்ள அரசருக்குப்பிள்ளைகளில்லாததால கடவுளைப் பிரார்த்தித்து பல திருப்பணிகள் செய்தார். கடவுளருளால் ஒரு தெய்வத்தன்மை யமைந்த பெண் குழந்தை பிறந்தது. இக்குழந்தையை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்துவந்தார், இப்பெண்ணிற்கு 5 வயது முதல் 12 வயது வரையில் சகல சாஸ்திரங்களையும் கற்பித்துக்கொடுத்தார். பெண் பக்குவகாலமடைந்ததைக்கண்ட தர்மவர்மா தகுந்த பிள்ளையைத்தேடி கலியாணம் செய்விக்கமுயன்றார். ஆனால் பெண்ணின் எண்ணமோ, கலியாணம் செய்துகொண்டு சம்சார சாகரத்தில் விழாமல், இனிப் பிறக்காமல் மோக்ஷமடையவேண்டுமென்பது. இதற்குக் கடவுளிடத்தில் விசுவாசம் வைத்து அவரிடம் பக்தி செலுத்தவேண்டும். இதைத்தவிர இந்தக்கலியுகத்தில் வேறு சாதகம் கிடையாது என்று நிச்சயித்து ஸ்ரீரங்கநாதரைக் குறித்துப் பக்திசெய்துவந்தாள். இப்படித்தம்மை விடாமல் தியானம் செய்துவருகிறதைக்கண்ட ஸ்ரீரங்கநாதர், இவளுக்கு நேரில் சுயரூபத்துடன் தரிசனங்கொடுத்துக் கடைசியில் மோக்ஷத்தையுங் கொடுத்தார். இதைக்கண்ட தர்மவர்மா தன்பெண்ணின் ஞாபகார்த்தமாய் உறையூரில் ஒரு கோயில் கட்டி அதில் தன் பெண்ணைப்போல் சிலைசெய்து பிரதிஷ்டை செய்து ஸ்ரீரங்கநாதர் தன் பெண்ணிற்கு மோக்ஷம் கொடுத்த தினத்தில், ஸ்ரீரங்கத்திலிருந்து ஸ்ரீரங்கநாதரை உற்சவகோலத்துடன் எடுத்துச்சென்று நாச்சியார் என்னும் தன் பெண்ணின் அருகில் வைத்து இருவரையும் தரிசித்து ஆனந்தமடைந்துவந்தார். இந்தப் பக்திக்கு வியந்து ஸ்ரீரங்கநாதர் தர்மவர்மாவிற்கு மோக்ஷம் கொடுத்தார். அதுமுதல் இப்

போதும் நாச்சியாருக்கு மோக்ஷம் கொடுத்த தினத்தில் ஸ்ரீர ங்கநாதரை திருவிழாக் கோலத்துடன் எடுத்துச் சென்று நாச்சியாருடன் வைத்து நாமெல்லாரும் கண்டு ஆனந்தித்து வருகிறோம். இந்த உறையூர்க்கோயில் தர்மவர்மாவால் தன் பெண்ணாகிய நாச்சியாருக்காக கட்டப்பட்டதென்றும் இந்த அரசருக்குப் பிறகு ஆண்ட சோழர்கள் உறையூர்க் கோயில் திருப்பணிகள் செய்திருப்பதாகவும் இக்கோயிலின் சுவரில் எழுதப்பட்டிருக்கிறது.

III. காவேரி கல்லணை :—(1) இது திரிச்சிராப் பள்ளிக்குக் கிழக்கே சுமார் 10-மயில் தூரத்தில் காவேரியி னின்றும் விண்ணாறு பிரியுமிடத்தில் காவேரியின் வடகரை யில் கருங்கல்லால் கட்டிய ஒரு அணை. அணை ஆற்றின் குறுக்கே கட்டவேண்டியிருக்க, வடகரையில் கட்டப்பட்ட திற்குக் காரணமும், அதைக் கட்டிய அரசன் பெயரும் சொல்லுகிறேன் கேளுங்கள்.

காவேரியாறு மைசூர் ராஜ்யத்திற்கு மேற்கே குடகு மலையில் உற்பத்தியாகி, மைசூரில் கிழக்காகவும், பிறகு தெற் கே திரும்பிக் கோயம்புத்தூர் சேலம் ஜில்லாக்களுக்கு இ டையில் எல்லையாகவும், பிறகு கிழக்கே திரும்பி நமது ஜில் லாவின் நடுவில் பாய்ந்து தஞ்சாவூர் ஜில்லாவில் பல கிளைகளா கவும் பிரிந்து, முடிவில் தஞ்சாவூர் ஜில்லா, சீர்காழித்தாலூ காவில் காவேரிப் பட்டணத்தருகில் சமூத்திரத்தில் சங்கம மாகிறது. இந்தக்காவேரி திருச்சி ஜில்லாவிற்குள் பிரவே சிக்குமுன் பூமி வாட்டமாயிருப்பதால் அவ்விடமெல்லாம் இவ்வாற்றுப் பாய்ச்சலினால் பெரும்பாலும் சாகுபடி செய்ய ப்படுகின்றன. ஆனால் திருச்சிராப்பள்ளி முதல் காவேரி முகத் துவாரம் வரையில் ஓடித் தஞ்சாவூர் ஜில்லாவை "நெல்களஞ்

சியம்" என்று பெயர் உண்டாகும்படி பாய்ச்சலுக்கு உதவுகிறது. இந்த ஆற்றில் அதிக ஜலம் வந்தால் தஞ்சாவூர் ஜில்லாவில் ஆறுகள் உடைந்து, கிராமங்களும் பூமிகளும் பாழாகிவிடுகின்றன. தஞ்சாவூர் ஜில்லாவும் சோழராஜனைச் சேர்ந்தது. ஆகையால் அதிக வெள்ளம் வந்தால் அதைக் கொள்ளும்படி ஒரு கிளை திருச்சிக்கு மேற்கே சுமார் 10-மைல் தூரத்தில் குணசேகரத்திற்கருகில் காவேரியினின்று வெட்டி விடப்பட்டிருக்கிறது. இக்காரணத்தினால் இதற்குக் கொள்ளிடம் எனப் பெயரிட்டார்கள். இப்படி வெட்டி விட்டவர்கள் ஆதிகாலத்திலிருந்த சோழ ராஜாக்கள். அநேக வருஷகாலம் காவேரியின் அதிக வெள்ளம் கொள்ளிடத்தின் உதவியால் தடுக்கப்பட்டது. காளடைவில் இந்தக் கொள்ளிடத்தின் தலைப்பு மேடிட்டு ஒரு திட்டை உண்டாக்கிவிட்டது. இப்போது அந்தத் திட்டின் ஒரு பாகம் காணப்படுகிறது.

இதனால் காவேரியின் அதிக வெள்ளம் மறுபடி கொள்ளிடத்தில் சேரும்படி காவேரியினின்றும் விண்ணாறு பிரியுமிடத்தில் வடபுறம் பள்ளமாயிருந்ததால் காவேரியின் வடகரையை உடைத்து அதின் வழியாய்க் கொள்ளிடம் போய் விழும்படி ஒரு வாய்க்காலைச் சோழராஜா வெட்டினார் இதனால் ஸ்ரீரங்கம் தீவு போலாயிற்று. இந்த வாய்க்காலுக்கு உள்ளாறு எனப்பெயர். இந்த உள்ளாற்றினால் சில காலம் காவேரியின் அதிகப்படி ஜலம் கொள்ளிடம்போய் வீழ்ந்தது. இதனால் காவேரியில் சரியான ஜலம் சென்று தஞ்சாவூர் ஜில்லாவைச் செழுப்பிக்கச் செய்தது. இந்த உள்ளாறு காளடைவில் அதிகப் பள்ளமும் அகலமுமாகிக் காவேரியில் சுமல்ப ஜலம் கூட இல்லாமல் செய்துவிட்டது. இக்காலத்தில் இதைச்சரிவரப்பார்த்து ஏற்பாடு செய்யவேண்டியது உறை

யூரில் ஆண்ட சோழ ராஜரின் கடைமையல்லவா? உறையூரி லாண்ட அப்போதிய சோழராஜன் உறையூர் மணமாரியால் அழிந்தபோது இறந்தான். அரசன் மனைவி மட்டில் சிலரு டன் ஓடி முற்கூறிய காவேரி பட்டணத்திற்குச் சென்று வசித்தாள். ஆகையால் காவேரியின் ஜலம் கொள்ளிடம் போய் விழுந்துகொண்டிருந்தது. சில காலத்திற்குப் பிறகு அரசகுமாரன உறையூர் வந்து பட்டணத்தைப் புதுப்பித்து, இந்த ஆற்றின் குறுக்கே அணைபோட்டு காவேரியின ஜலம் சரிவரப் பாயும்படி ஏற்பாடு செய்தார். உறையூர் பாழான தும், அரசகுமாரன் திரும்பிவந்து புதிப்பித்ததும், அணை கட்டிய விபரமும், அடியில் கூறிய கதையால் விளங்கும்

---


## கரிகால் சோழன் சரித்திரம்.

(2) திரிச்சிமலைக்கோட்டையில் திரிசிரன் இறந்தபிறகு ரிஷிகள் சென்று தவம் செய்துவந்தார்கள். இப்படித் தவம் செய்தவர்களில் சாரமா முனி என்பவர் ஒருவர். இவர் மலை யில் நந்தவனம் வைத்து செவ்வந்தி புஷ்பம் பயிர் செய்து தாயுமானவர் பூசைக்கு உபயோகித்து வந்தார். அக்காலத் தில் உறையூரில் ஆண்ட சோழராஜன் மனைவி கர்ப்பிணியா யிருந்தாள். அவளுக்கு சூட்டிக்கொள்ள புஷ்பம் உத்தி யானவனத்தில் இல்லாமையால் தூதர்கள் மலையிலுள்ள நந்த வனத்தில் நுழைந்து புஷ்பங்களைத் திருடி ராஜன் மனைவிக்கு கொண்டுபோய்க் கொடுத்து வந்தார்கள். இப்படிப் புஷ்பம் திருட்டுப்போனபடியால் சாரமா முனிக்குத் தாயுமானவர் பூசை செய்ய புஷ்பங்கள் இல்லாமல் போயின. இத்திருட் டை கண்டுபிடிக்க முனிவர் ஒருநாள் தோட்டத்தில் பதுங்கி யிருந்தார். அப்போது தூதர் சென்று புஷ்பம் கொய்து வெளியில் வந்தார்கள். உடனே அவர்களை முனிவர் ஒரு

னாள் விசாரித்ததில் அவர்கள் ராஜதூதரென்றும், அரசன் உத்தரவுப்படி வந்ததாகவும் தெரிந்து, அரசரிடம் நேரில் சென்று முறையிட்டார். சோழ ராஜன் தன் மனைவியின் தாக்ஷிண்யத்தினால் தூதரைக் கண்டிக்காமலும், முனிவரை லக்ஷியம் செய்யாமலும் இருந்தார். ஆகையால் முனிவர் கோபங்கொண்டு உறையூர் பாழாகக்கடவது என்று சாபமிட்டார். இதை அநுசரித்தே திடீரென ஒரு பெருங் காற்றடித்து மண் மாரியாய்க் கொட்டி பட்டணம் மண்ணால் மூடப்பட்டது. இப்போதும் உறையூரில் பல இடங்களில் வெட்டினால் பாழான கட்டடங்கள் காணப்படுகின்றன. இதனால் பழைய உறையூர் மண்ணில் அழுந்தியது உண்மையென்று யூகிக்கலாம். இப்படிப் பட்டணம் அழிந்து அரசன் இறக்கவே அரசன் மனைவி கர்ப்பிணியாகையால், தனது நாடாகிய தஞ்சாவூர் ஜில்லாவில் காவேரிப்பட்டணத்திற்குத் தன் பரிவாரத்துடன் ஓடிப்போனாள். அவ்விடம் சென்றபிறகு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. உறையூர் அழிந்த காலத்தில் இராஜனும் அவனைச் சேர்ந்தவர்களும் மண் மாரியால் மூடப்பட்டு உயிர் துறந்தனர். தப்பிப்போன மந்திரி மறுபடி உறையூர் வந்து ஓடிப்போனவர்களைச் சேர்த்து, மறுபடி பட்டணத்தை உண்டாக்கி ஆளவேணுமென்று எண்ணங்கொண்டு அரசவம்சம் அற்றுப்போனதாகக் காட்ட, காவேரிப் பட்டணத்தில், அரசகுமாரன் வசித்த வீட்டிற்கு நெருப்பு வைத்துவிட்டான். தீப்பற்றி எரியும்போது அரசகுமாரன் தாயுடன் தப்பி வெளிப்பட்டான் கால்மட்டில் காயமாயிருந்தது. காலக்கிரமத்தில் சௌக்கியமாயிற்று. ஆகிலும் கால் மட்டும் கருகிய வடுவாயிருந்தபடியால் இவரைக் குடிகள் கரிகாற் சோழன் என அழைத்தார். இவர் சுமார் (1860) வருஷங்களுக்கு முன் நம்மை ஆண்ட அரசர். இவர் தன் தாயு

டன் திரிசிரபுரம் வந்து தாயுமானவரைச் சேவித்து, சாரமா முனியை அடிபணிந்தார். அவர் கோபம் தணிந்து பழைய படி உறையூரைப் புதுப்பித்து ராஜ்யம் ஆளும்படி கட்டளை யிட்டார். அவர் கட்டளைப்படி உறையூரைப் புதுப்பித்து அரசாண்ட காலத்தில் குடிகள் காவேரியில் ஜலம் அற்று, கொள்ளிடம் போய் விழுந்துகொண்டிருக்கிறபடியால் ஜலத் தை தேக்கி, காவேரியின் வடகரையில் பாய்ந்த உள்ளாற்றை ஒரு அணை கருங்கல்லால் கட்டித் தடுத்தார். இதின் நீளம் 1080 அடி. அகலம் 80 அடி. உயரம் 18 அடி. பாப்பு போல் வளைந்து வளைந்து இருக்கும் மாதிரியாய்க் கருங்கல் லால் கட்டினர். இது தான் காவேரிக்கல்லணை. இதை இப் போது கிராண்டு அணைக்கட்டு என்று சொல்லுகிறார்கள். நமது இங்கிலீஷ் கவர்ண்மெண்டார் சுமார் 79 வருஷத்துக்கு முந்தி இவ்வணையில் மணற்போக்கு வைத்து சொருகு பலகை போட்டு, அணைமேல் வண்டிகள் போகக்கூடியபடி பாலம் கட் டினார்கள். இந்தகாலத்தில் கொள்ளிடத்தின் தலைப்பில் மணற் போக்கு வைத்து, அடபர் அணைக்கட்டு கட்டினார்கள். இவற் றால் இப்போது காவேரியில் சரிவர ஜலம் பாய்கிறது.

IV. பல்லவ குகை :—(1) திருச்சி மலைக்கோட் டைப் படத்தைப் பார்த்தால் உச்சிப்பிள்ளையார் கோயிலுக் குத் தென்புறம் ஒரு மண்டபம் தெரிகிறது. அந்த மண்ட பத்திற்கு எதிரில் மலையில் ஒரு குகையும் மலையின் தென் புறத்தெருவில் அடிவாரத்தில் ஒரு குகையும் குடையப்பட் டிருக்கின்றன. முற்கூறிய குகையில் இதைக்குடைந்த முத லாவது மஹேந்திர வர்மன் என்ற பல்லவ ராஜன் தான் நமது ஜில்லாவை ஆண்டகாலத்தில் குடைந்துவைத்ததாக



பல்லவர் குகை

எழுதி வைத்திருக்கிறார். இவர் சுமார் 1300 வருஷங்களுக்கு முன் நமமையாண்ட அரசர்.

முன் பாடத்தில் கரிகாற் சோழன் நம்மை 1860 வருஷங்களுக்கு முன் ஆண்டதாகப் படித்தோமல்லவா? இவருக்குப் பிறகு இவர் சந்ததியார் 150 வருஷங்கள் ஆண்டார்கள். இதில் கடைசியிலாண்ட சோழராஜர் காலத்தில் இவரைவிட அரசாளும் சக்தியையுடைய ஒரு ஜாதியார் காக்ஷன் மலைப்பக்கங்களிலிருந்து புறப்பட்டு இந்தியாவின் வடமேற்குக் கணவாய் வழியாகப் புகுந்து இந்தியாவின் தென்பாகத்திற்கு வந்து இவ்விடம் ஆண்ட சேர சோழ பாண்டியர்களை வென்று தமக்குள் அடங்கியாளும்படி செய்தார்கள். இச்சாதியார் கோதாவரியாற்றின் கரையிலுள்ள வெங்கி என்னும் பட்டணத்தைத் தலைநகராக்கித் தெற்கு காஞ்சிபுரத்திலும் பாலக்காட்டிலும் தமது ராஜபிரதிநிதிகளை நியமனம்செய்து சேர சோழ பாண்டியர்களின் நாட்டையும் சேர்த்து பரிபாலனம் செய்தார்கள். இவர்கள் பரிபாலனம் செய்யும் வல்லமையுள்ளவர்களாகையால் இவர்களுக்கு ஜனங்கள் பாலவர் எனப் பெயரிட்டார்கள். இப்பெயரே பல்லவர் என மருவி வழங்கப்பட்டது. இந்த வம்சத்து அரசர்களுக்குக் பல்லவ அரசர் எனபபட்டம் வந்தது. இதில் கியாதி பெற்ற அரசர் தான் நம்மை ஆண்டதாக திருச்சி மலைக்கோட்டைகுகையில் எழுதிவைத்திருக்கிறார். இதைக்கொண்டு நாம் பல்லவர் ஆட்சிக்கு உட்பட்டு இருந்தோம் எனத் தெரிகின்றது. இவர்கள் கஞ்சம் முதல் தெற்கே சென்னை ராஜதாணி முழுவதும் ஆண்டார்கள் இவர்கள் பலமான கோட்டைகள் கட்டியிருக்கிறார்கள். தண்ணீர்ப் பாய்ச்சலுக்கு ஆறுகளில்லாத இடங்களில் ஏரிகள் வெட்டியிருக்கிறார்கள். கைத்தொழி

விருத்தி செய்திருக்கிறார்கள். சமுத்திரத்தின் வழியாயும் நிலத்தின் வழியாயும் வியாபாரம் நடத்தியிருக்கிறார்கள்.

**பல்லவ ராஜ்யத்தை மறுபடி சோழர் கைப்பற்றி யாண்டது : திருஞ்ஞான சம்பந்த மூர்த்தி நாயனார் சரித்திரம்:**—பல்லவ ராஜவம்சத்தார் நம்மைச் சுமார் 1000 வருஷங்களுக்கு முன் வரையில் ஆண்டார்கள். அப்போது படாமியில் (பபாயில்) ஆண்ட சாளுக்கிய ராஜ வம்சத்தாரில் 2-வது விக்கிரமாதித்தியர், வெங்கியிலாண்ட பல்லவ ராஜனை ஜெயித்து, தெற்கே காஞ்சிபுரத்திற்குத் துரத்திவிட்டார். காஞ்சிபுரத்தைத் தலைநகராக ஏற்படுத்திக் கொண்டு பல்லவ ராஜன் ஆண்டு வருநாளில் பௌத்த சமண மதம் பரவலாயிற்று. அப்போது ஆண்ட பல்லவ ராஜன் பௌத்தசமண குருக்களால் உபதேசமடைந்து, அவர்களில் பௌத்தகுருக்களுக்கு திரிச்சி தாலூகா திருவள்ளாமலையில் ஒரு குகையும், சமண குருக்களுக்கு குளித்தலைத் தாலூகா மகாதானபுரத்திற்கு அருகில் பழைய சங்கடமென்னும் பழைய ஜயங்கொண்டத்தில் ஒரு மண்டபமும் குளமும் செய்வித்ததுமன்றி குடிகளுக்கும் சிற்றரசர்களுக்கும் பௌத்த சமணமதத்தை உபதேசிக்கும்படி செய்தார். இதனால் ஹிந்து மதம் சீர்குலைந்து பௌத்த சமண மதங்கள் தலையெடுக்க திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் திரு அவதாரம் செய்தார். இவர் தஞ்சாவூர் ஜில்லா சீர்காழி தாலூகா சீர்காழி நகரத்தில் பிராமண குலத்தில் சிவபாத விருதயருக்கும் பகவதியாளுக்கும் பிறந்தவர். இவர் இளம் பிராயத்தில் அம்பிகையால் ஞானப்பால் ஊட்டப்பட்டபடியால், இளமைமுதல் ஞானமடைந்து, உபநயனமானபிறகு தம்மூரை விட்டுப் பல ஸ்தலங்களுக்குச்சென்று, கடவுளைத் தரிசித்து பாடல்களால்

179892

ஸ்துதித்துவந்தார். இவ்விதமாய் எல்லோரும் பக்தி செய்ய வேண்டும் என்றும், பௌத்த சமண மதத்தைப் பொய் மதமென்றும், உபதேசித்துவந்தார், இக்காலத்தில் மதுரையிலாண்ட பாண்டியன் சமண மதத்தை அனுசரித்து அதை ராஜமதமாக்கிவிட்டான். இப்பாண்டியன் மனைவி சோழ ராஜனுடைய மகள். ஆகையால் அவள் தன் புருஷனை ஹிந்து மதத்தில் பிரவேசிக்கச் செய்யவும், சமணரை வாதாடித் துரத்தவும், சாமர்த்தியத்தைத் தெய்வருளால் அடைந்த திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரை வரவழைத்தாள். நாயனார் அவள் வேண்டுகோளின்படி மதுரைக்குச் சென்று ஒரு மடத்திலிருந்தார். இதை யறிந்த சமணர், பாண்டியனிடம் உத்தரவு பெற்று, நாயனார் அடியார்களுடன் தங்கியிருக்கும் திருமாளிகையில் நெருப்பு வைத்தார்கள். நள்ளிருளில் தாம் வசிக்கும் மடம் எரிவதைக்கண்ட நாயனார் இது சமணரின் செய்கையென யறிந்து தமது பஞ்சாக்ஷர மந்திரத்தால் அதைத் தடுத்து, பாண்டியனுக்கு சுகமுண்டாகக் கடவுளை வேண்டினார். அவ்விதமே பாண்டியன் கடுமையான சுரநோயால் பீடிக்கப்பட்டவுடன் தமது சமணகுருக்களைக்கொண்டு சுரம் தீர்க்க முயன்றார். அவர்களால் முடியாமல் போகவே அவரது மனைவி ஹிந்துமத அபிமானியாகையால் திருஞானசம்பந்தரை வரவழைத்தால் நோய் தீரும் என்று புருஷனுக்குச் சொன்னாள். அவள் கருத்துக்கிணங்கவே பாண்டியன நாயனாரை வரவழைத்தார். நாயனார் அரண்மனைக்குச் சென்று சுரத்தைத்தீர்க்க முயலுகையில் சமணரும் வந்து பாண்டியனைத் தாமும் சேர்ந்து சுரத்தை தீர்ப்பதாய் கேட்டுக்கொண்டார்கள். அதற்கு நாயனார் ஒவ்வாமல், தாமொரு பக்கமும் சமணர் ஒரு பக்கமுமாகச் சுரத்தைத் தீர்ப்பதாகத் திட்டஞ்

செய்துகொண்டார். அவ்விதமே தமது பாகத்தைச் சௌக்கியப்படுத்தவே, அரசன் தேகத்தில் மறு பாதியை சமணரானமட்டும் தீர்க்கமுயன்றும் முடியாமற் போய்விட்டது. பிறகு அரசன் வேண்டுகோளின்படி நாயனார் மறு பாதியையும் சௌக்கியப்படுத்தினார். இதனால் சமணர் நாயனார்மேல் பொறாமைகொண்டு, ஒருக்கால் அரசர் சமண மதத்தை வெறுப்பாரோ என மருண்டு, நாயனாருடன் வாதாடி தம்மதத்தை ஸ்தாபிக்க முயன்றார்கள். அரசரும் சம்மதித்தார். இருதிற மதத்தின் உண்மையை ஒரு ஓலையில் எழுதி தீயிலிடுவதென்றும், எந்தச சீட்டு எரிந்துபோகின்றதோ அதிற்குடையவரின் மதம் பொய் என்றும்; ஒரு ஏற்பாடு செய்துகொண்டு அரசன் முன்னிலையில் தீமூட்டி, அதில் போட்டார்கள். இதில் சமணர் ஓலை எரிந்து சாம்பலாயிற்று. சம்பந்தர் ஓலை எரியாமல் இருக்கக்கண்ட சமணர் மூன்று முறை பரீக்ஷை செய்ய முயன்றார் அப்போது நாயனார் அரசன் உத்தரவுப்படி, எந்தக்கக்ஷிக்காரர் தோல்வியையடைகிறார்களோ அவர்களைக் கழுமரத்தில் ஏற்றுகிறது என்று திட்டம் செய்தார். சமணர் இதற்குச் சம்மதித்து, தமது மதத்தின் உண்மையையும் ஹிந்து மதத்தின் உண்மையையும் தனித்தனி ஓலையில் எழுதி வைகையாற்றில் விடுகிறதென்றும், யாருடைய ஓலை ஆற்றில் மேலேறிச்செல்லுகிறதோ அவருடைய மதமே சத்தியமான மதமென்றும், சமுத்திரம் போய்ச்சேரும் ஓலையில் கண்ட மதம் அசத்தியமென்றும் அரசனிடங் சொல்லி அவர் முன்னிலையில் நாயனாரும் சமண குருவும் தம் தம் ஓலையை வைகையாற்றில் விட்டார்கள். நாயனார் ஓலை மேலே சென்றது. சமணர் ஓலை சமுத்திரம் சேர்ந்தது. ஆகையால் ஏற்படுத்திக்கொண்ட திட்டப்படி அந்நாட்டிலுள்ள 8,000 சம


ணர்களைக் கழிவிலேற்றி, பாண்டிய குரு ஹிந்துமதத்தில் நம்
பிக்கை யுண்டாகும்படி செய்தார். கருவூரில் கழுவேற்றி
மூலையென்று ஓர் இடம் ரயில் ஸ்டேஷனுக்கு சமீபத்திலிருக்
கிறது. இங்கு வருஷத்திற்கு ஒரு முறை உற்சவத்தில் சம
ணரை ஏற்றியதுபோல் நடித்து காட்டப்படுகிறது. பிரஜை
களும் அரசனைப்போல் ஹிந்து மதத்தை யனுசரித்தார்கள்.
பிறகு ஞான சம்பந்தர் சோழ நாட்டிற்குத் திரும்பினார்.
போகும் வழியில் திருத்தெளிச்சேரியிலிருந்த பௌத்தமடா
திபதிகளில ஒருவரான புத்த நந்தி என்பவர் நாயனார் எதி
வரும் பல்லக்கைத் தடுத்து அடியார்களையும் அடிக்க எத்த
னித்தார். இதை யறிந்த நாயனார் கடவுளைத் துதிக்கவே
நந்தி புத்தன் தலையற்று வீழ்ந்தது. பிறகு சாரீபுத்தன் என்
னும் பௌத்த குரு நாயனாருடன் வாதாட ஒரு சபை கூட்டி
னார். அச்சபையில் திருஞான சம்பந்தர் வெற்றி பெற்றார்.
சிலர் பௌத்த மதத்தை விட்டு ஹிந்து மதத்தை யனுசரித்
தார். சிலர் காஞ்சீபுரத்திற்கு ஓடி தமது பல்லவ அரசருக்கு
தெரிவிக்கவே அரசன் ஞானசம்பந்தரை வரவழைத்து தம்
மிடமிருந்த சமணகுருவால் தர்க்கம் செய்வித்தார். அதிலும்
ஜெயிக்கவே, அவ்வூரிலுள்ள பனைமரங்கள் காய்க்காமல் ஆண்
பனையாகவே யிருந்தபடியால் அவைகளை பெண் பனைகளாக்கி
னால், ஹிந்து மதம் உண்மைதான் என்றும் தாமும் ஹிந்து
மதத்தை அனுசரிப்பதாக பல்லவ ராஜன் சொன்னார். உட
னே நாயனார் ஒரு பாடல் பாடி கடவுளை துதித்தார். கடவு
ளருளால் ஒரே காலத்தில் எல்லாம் பெண்பனையாகிக் காய்த்
தன. இருதிறத்தாரும் செய்துகொண்ட ஏற்பாட்டின்படி
பௌத்தர் ஹிந்து மதத்தை அனுசரித்தார்கள். பல்லவ அர
சன் மட்டில் பிடிவாதமாக தமது மதத்தை அனுசரித்தார்.

இவ்விதம் ஞான சப்பந்தர் போதிக்கவே, சிற்றரசர்களும் ராஜாக்களும் ஹிந்து மதத்தை கைப்பற்றி மதவிரோதியாகிய பல்லவ அரசரை கீழ்ப்படுத்தினார்கள். இவ்விதம் பல்லவ ராஜருடன் போர்புரிந்து வெற்றியடைந்தவர் ராஜராஜ சோழர். இவர் பல்லவர்களை ஜெயித்து வடக்கே கோதாவரியிலுள்ள வெங்கி நாட்டுச் சாலுக்கியர்களையும் தமக்குக் கீழ்ப்பட்டு ஆளும்படி செய்து மறுபடியும் சோழராஜ்யத்தை ஸ்தாபித்தார். இவ்விதமாய் நம்மை சுமார் 700 வருஷங்கள் ஆண்ட பல்லவர்கள் அபஜயமடைந்து சோழர்களுக்குக்கீழ்ப்பட்டுச் சிற்றரசர்களாகவும், நாளடைவில் பாளையக்காரர் தளகர்த்தராகவும் அமர்ந்து முடிவில் கிரிஷித்தொழில் செய்யப்புகுந்தார்கள். இப்போதிருக்கிற வன்னியர்கள், படையாச்சி முதலியோரும், புதுக்கோட்டை ராஜாவும் இவ்வகுப்பைச் சேர்ந்தவர்.

---

## 3. மறுபடி சோழர் பல்லவரிடமிருந்து ராஜ்யமடைந்து ஆண்டது.

கெங்கைகொண்ட சோழபுரம்:—முற்கூறிய கதைகளால் சோழர்கள் பல்லவர்களை வென்று நமது நாட்டை ஆண்டதாகத் தெரிந்துகொண்டோம். இவர்களில் ராஜராஜ சோழர் தஞ்சாவூரைத் தலைநகராக்கி அவ்விடம் ஒரு சிவன் கோவிலைக் கட்டினார். இவர் குமாரர் ராஜேந்திர சோழர் வடக்கே கெங்கையாற்றின் கரைவரையிலும் சென்று அந்த நாடுகளைக்கைக்கொண்டார். இதைப்பிறகு உள்ளவர்கள் தெரிந்துகொள்ளும்பொருட்டு "கெங்கைகொண்ட சோழபுரம்" என்று தன் வெற்றியைக் குறிக்க நமது ஜில்லா உடையார்பாளையம் தாலூகாவில் ஒரு பட்டணமுண்டாக்கி அதில் தஞ்சாவூர் கோயிலைப்போல் சிற்பவேலைகளமைந்த சிவன்கோயில்



ஸ்ரீரங்கம் தங்கவிமானம்.

ஒன்றைக்கட்டி அதில் தான் ஆண்டதை எழுதிவைத்திருக்கிறார். இதனால் மறுபடி நாம் சோழரால் ஆளப்பட்டோம் என்று தெரிகிறது.

இவருக்குப் பின் இப்போதைக்குச் சுமார் 600 வருஷங்களுக்கு முன் வரையில் சோழர் நம்மை யாண்டார்கள். இதில் முற்கூறிய ராஜேந்திர சோழர் பாண்டிய நாட்டை ஜெயித்து பாண்டியரைத் தமக்குக்கப்பம் கட்டி ஆளும்படி செய்தார். இவ்வம்சத்தைச் சேர்ந்த 3-வது குலோத்துங்க சோழர் நமது ஜில்லாவில் உய்யக்கொண்டான் வாய்க்காலை வெட்டிக் காவேரியின் தென்புறம் பாய்ச்சல் சௌகரியத்தைச் செய்தார். மூன்றுவது ராஜராஜ சொழர் முசிறிக்குச் சமீபத்தில் பெரிய வாய்க்காலை வெட்டி காவேரியின் வடபுறம் பாய்ச்சல் சௌகரியத்தைச் செய்து அந்த வாய்க்காலின் தலைப்பில் எழுதி வைத்திருக்கிறார்கள்.

V. 1. **ஸ்ரீரங்கம் கோவில் தங்க விமானம்: பாண்டியர் ஆளுகை**:—முற்கூறிய கதைகளால் ஆதிமுதல் சோழர்களும், பல்லவர்களும், மறுபடி சோழர்களுமாக சுமார் 600 வருஷங்களுக்கு முன் வரையில் ஆண்டிருப்பதாக தெரிந்துகொண்டோம். இப்படிக்கிருக்க, ஸ்ரீரங்கம் கோயில் விமானபிரகாரத்தில் கிழ்ப்புறம்மதிலில திருவடிக்கிநேரில் ஜடாவர்ம சுந்திர பாண்டியர் நமது நாட்டை யாண்ட காலத்தில் ஸ்ரீரங்கநாதர் கோயில் விமானத்தை தங்க முலாம் பூசிப்பல திருப்பணிகள் செய்ததாக எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் நாளடைவில் முலாம் மங்கிப்போனமையால் சில வருஷங்களுக்குமுன் பலர் கூடி மறுபடி புதுப்பித்திருக்கிறார்கள். அதே பிரகாரத்தில் தனது மீன் கொடியைச் செதுக்கியிருக்கிறார்.

சோழ ராஜர்களில் கடைசியாக வாண்ட 3-வது ரா

ராஜசோழர் காலத்தில் பாண்டியர் படையெடுத்துச் சோழ நாட்டைக் கைக்கொண்டார். அப்போது பம்பாய் ராஜதானியில் படாமி (பம்பாய்) யிலாண்ட சாளுக்கியர் என்னும் ராஜ வம்சத்தார் ஹோயஸலேக்களால் ஜெயிக்கப்பட்டார்கள். இந்த ஹோயஸலே வம்சத்தார் சோ ராஜ்யத்தைக் கைப்பற்றினர்கள். பாண்டியர், 3-வது ராஜ ராஜ சோழர்மேல் படையெடுத்த காலத்தில் இந்த ஹோயஸலேக்கள் சோழருக்கு உதவிசெய்து சோழநாட்டில் சில பாகத்தையடைந்தார்கள். சோழர்களை வென்ற பாண்டியர்கள் நமதுஜில்லாவின் பெரும்பாகத்தை யடைந்து சுமார் 50 வருஷம் ஆண்டார்கள் மலைக்கோட்டை யுச்சியில் மேல்புரம் விபீஷணர் பாதசுவடு இருப்பதாக படித்திருக்கிறீர்களல்லவா. அதற்குப் பக்கத்தில் பாண்டியர்களின் கொடியாகிய "மீன் கொடி" சித்திரித்திருக்கிறார்கள். இதனாலும், விமானத்தினாலும், பாண்டியர் நம்மை யாண்டதாகத் தெரிந்துகொண்டோம்.

---

## ஹோயஸலேக்கள் ஆளுகை.

2. கண்ணனூர் போஜலீஸ்வரர் கோவில் திருச்சினாப்பள்ளிக்கு வடக்கே சென்னப்பட்டணம் போகும் மார்க்கத்தில் சுமார் 8 மைல் தூரத்தில் சமயவரம் என்னும் ஊரிருக்கிறது, இதற்குவடபுறம் பட்டணம்ரோட்டிற்குகிழக்கே 'போஜலீஸ்வரர்' என்ற கோயில் ஒன்றிருக்கிறது. இதைவெகுநாளாக போஜராஜர் கட்டியது என்று நினைத்தார்கள். போஜராஜன் வட இந்தியாவையாண்டவரசர். சமீபகாலத்தில் பெங்களூரில் ஒரு செப்புசாஸனம் அகப்பட்டது. அதில் வீரசோமீஸ்வர, ஹோயஸலேயரசர் சோழருக்குச் சண்டையில் உதவிசெய்து சோழநாட்டில் சில பாகத்தையடைந்து அதில் விக்ரமபுரியை (கண்ண

னூரைத்) தலை நகராக்கி யாண்டதாக எழுதப்பட்டிருக்கிறது. பிறகு இக்கோயிலைப் பார்த்தபோது சுவரில் வீர சோமீசுவரர் கட்டியதென்று எழுதப்பட்டிருக்கிறது. இதேயரசர் திரு ஆனைக்காவல் கோயில் மதில் களிலும், குளித்தலை தாலூகா ரத்னகிரிமலையிலும் தாம் ஆண்டதாக எழுதி யிருக்கிறார். வீரசோமீசுவரர் கட்டிய கோயிலை போஜலீஸ்வரர் கோயிலென்று சொல்லுகிறார்கள். இதனால் சோழரை வென்று நம்மை பாண்டியர் ஆண்ட காலத்தில் ஹோயஸலேக்களும் ஆண்டதாக ஸ்ரீரங்கம் கோயிலிலும் எழுதிவைத்திருக்கிறது.

---

## VI ஸ்ரீரங்கம் தெற்குராயர் கோபுரம்—இராமதாஸ் சரித்திரம்

**மகம்மதியர் படை யெடுப்பு:**—முன் படித்த கதைகளால் சோழர்கள் பல்லவர்கள் மறுபடியும் சோழர்கள் பாண்டியர்கள் ஹோயஸலேக்களுமாக சுமார் 700 வருஷங்களுக்கு முன் வரையில் ஆண்டிருப்பதாய் அறிந்தோம். பாண்டியர்கள் கடைசியாக ஆண்டகாலத்தில் வடதேசத்தில் நமது ஆரியராஜாக்கள் ஒருவரோடொருவர் சண்டையிட்டுக் கொண்டார்கள். இதைப்பார்த்த ஆப்கானிஸ்தானத்திலிருந்து மகம்மதியர்கள் இந்தியாவின் மேல் படையெடுத்து வட இந்தியாவைப் பிடித்து டில்லியைத் தலைநகராக்கிக்கொண்டு ஆண்டார்கள். இப்படி ஆண்டுவந்ததில், சில வருஷங்களுக்குப்பிறகு இவர்களில் உள் கலகமுண்டாகி, சென்னை இராஜதானியின் வடக்கெல்லையாக பீஜப்பூர், கோலகொண்டா என்னும் இரண்டு மகம்மதிய ராஜ்யங்கள் ஏற்பட்டன. இவர்கள் இந்துக்களை மகம்மதியர்களாகச் செய்வதும், கோயில்களை இடிப்பதும் முக்கியமான கௌரவமெனக் கருதினார்கள் இக்காலத்தில் மகம்மதியர்களுக்கு ஹிந்து மதத்தின் மகிமை

யை தெரியப்படுத்தவும், ஹிந்துக்களை மகம்மதிய மதத்தில் சேரவிடாமல் அவர்களுக்கு விஷ்ணுபக்தியை உண்டாக்க வும் ஒரு மகாபுருஷர் அவதாரமானர். இவர் கோலகொண்டா தானிஷா ராஜ்யத்தில பத்ரகிரி தாலூகாவில் பிறந்து கோ பன்ன என்னும் நாமம் பூண்டு, தக்க வயது வந்தவுடன், மணம் புரிந்து 'இல்லறமல்லது நல்லறமன்று' என்னும் பழ மொழிக்கிணங்க இல்லற வாழ்க்கையிலிருந்து, ஸ்ரீராம பக்தி செய்துவந்தபடியால், இவருக்கு ஜனங்கள் இராமதாஸர் என்று பெயரிட்டார்கள். இவர் தினந்தோறும் அடியார்க ளுக்கு அன்னதானம் செய்துவந்தார். ஒரு வருஷம் அநேக மாயிர பிராமணர்களுக்குச் சமாராதனம செய்து முடித்து, பிறகு தாம் போஜனம் செய்யப்புகுமுன் தமது 5 வயதுள்ள குழந்தையைத் தேடினர். அக்குழந்தை தெய்வச் செயலால் அன்னம் வடித்த கஞ்சிக்குழியில் வீழ்ந்து இறந்து மிதந்தது

கோபன்ன அக்குழந்தையை எடுத்துத தகனம் செய்ய நிச்சயித்தார். அப்போது கோபன்ன பகவானை நம்பினோர் களுக்கும் இவ்விதம் இடர் உண்டானல் கடவுளிடத்தில் ஏன் பக்தி செய்யவேண்டும என்று ஜனஙகள் கருதி கடவுளிடத் தில் நம்பிக்கையில்லாமற் போவார்களே என வருத்தமடை ந்து, தமது குழந்தை யிறந்ததையும் பெரிதாக எண்ணமல் ஜனஙகளுக்குக்கடவுளிடத்தில் நம்பிக்கையுண்டாக்கி ஹிந்து மதத்தில் பற்று உண்டாக்க அக்குழந்தையை எடுத்து அவ் வூர் மலையின் மீதுள்ள ஸ்ரீராமர் சன்னிதானத்தில் போட்டுத் துதித்தார். உடனே அக்குழந்தை தூங்கி எழுந்ததைப் போல் எழுந்து வந்தது. அப்போது ஜனங்களுக்கு ஸ்ரீராம பக்தி ஏற்பட்டது. இவ்விதம் நடந்த கொஞ்சகாலத்திற்குப் பிறகு கோபன்னுவிற்கு அன்னதானம் செய்யப் பொருளில் லாமையால், உபாதானம் (அரிசிப்பிச்சை) எடுதது தர்மம் செய்துவந்தார். அக்காலத்தில் பத்ராசலம் தாலூகா தாசில்

காஸியா யிருந்தபடியாலும் கோபன்னுவின் அம்மான் (மாமன்) கோலகொண்டா தானிஷாவிடம் மந்திரியாயிருந்தபடியாலும், கோபன்ன கோலகொண்டாவிற்குச் சென்று தானிஷாவைப்பார்த்து தமக்குத் தாசில் வேலை கிடைக்க உத்தரவாகவேணுமாய்ப் பிரார்த்தித்தான். தானிஷா இவரது குணத்தைப்பார்த்து இவருக்கே பத்ராசலம் தாலூகா தாசில் வேலையைக் கொடுத்தார். கோபன்ன மேற்படி வேலையை ஒப்புக்கொண்டு பத்ராசலம் சென்று அப்போது வசூலாகாமலிருந்த 6 லக்ஷம் ரூபாய்களை வசூலித்தார். அக்காலத்தில் அவ்வூர் ஜனங்கள். பத்ரகிரி மலைமேலுள்ள ஸ்ரீராமர் கோயில் மகம்மதியரால் இடிபட்டுப்பாழாகியிருந்தபடியால் அக்கோயிலைக்கட்டி முடிக்கவேணுமென்று, கோபன்னுவை கேட்டுக்கொண்டார்கள். இவ்விதப்பொதுவான தர்ம வேலைகளைச் செய்யவேண்டியது சர்க்காரின் கடமையென்றும், ஆனால் கோலகொண்டா தானிஷா மறந்துவிட்டார் என்றும், கோபன்ன நினைத்து தம்மிடம் வசூலாயிருந்த 6 லக்ஷம் ரூபாய்களையும் அரசருக்காகத் தாமே செலவு செய்து கோயிலைக் கட்டி முடித்துப்பிறகு தானிஷாவிற்கு தெரியப்படுத்தினால் தம்மிடம் சந்தோஷப்படுவார் என்று மேற்படி வேலையைத் தாமே முடித்தார். இவ்விதம் பத்ரகிரி மலை மீதுள்ள ஸ்ரீராமர் கோயிலைக்கட்டி கும்பாபிஷேகம் செய்தார். சில துஷ்டர்கள் தானிஷாவிடம் சென்று கோள் சொன்னார்கள். உடனே தானிஷா கோபன்னுவை வரவழைத்து விசாரித்ததில், உண்மையாக தமது உத்தரவின்றி சர்க்கார் பணத்தைச் செலவழித்ததற்காக இராமதாஸரைச் சிறையிலிட்டார்.

இவ்விதம் சிறையிலடைபட்ட கோபன்ன கஷ்டப்பட்டுக்கொண்டு பகவானைத் துதித்துவந்தார். இவர்மேல்கருணை


கொண்டு ஸ்ரீராமர், லக்ஷ்மணருடன் ஒருநாள் இராத்திரி கோபன்னுவின் சேவகர்போல் வேடம்பூண்டு கோலகொண்டா தானிஷாவின் பள்ளியறைக்குள் சென்று, தானிஷாவிடம் கோபன்ன செலுத்தவேண்டிய 6 லக்ஷம் ரூபாய்களை செலுத்தி ரசீது பெற்றுத் திரும்பினார். அப்படி வருங்கால் ஸ்ரீராமர் தானிஷாவிற்கும் பாததரிசனம் கொடுத்து உடனே மறைந்தார். உடனே தானிஷா வந்த சேவகர்களை தேடியும் காணாமையால், வந்தவர் கடவுளாக இருக்கவேண்டுமென்றும், இதின் உண்மையை கோபன்னுவை கேட்டால் தான் தெரியுமென்றும் நினைத்து அவர் இருக்கும் சிறைச்சாலைக்குத் தமது பத்தினி சகிதமாய்ச் சென்றார். இதேகாலத்தில் பகவான் பணம் செலுத்திய ரசிதை கோபன்னுவின் தலைமாட்டில் வைத்துவிட்டுச்சென்றார். கோபன்ன விழித்துப் பார்க்கையில் தமக்காக யாரோ பணம் செலுத்திய ரசிதை மட்டும் வைத்துவிட்டுப்போனபடியால், இப்படி யாவர் செய்திருக்கலாமென மயங்கிக் கொண்டிருக்கையில், தானிஷா கோபன்னுவிடம் வந்து, தம்மிடம் பணம் செலுத்தி திரும்பிப்போகையில், பொற்பாத தரிசனம் கொடுத்து மறைந்தவர் கடவுளாக இருக்கவேண்டுமென்றும், தமக்கு அவருடைய முழுதரிசனம் கிடைக்கச்செய்யவேணுமாய்க் கேட்டுக்கொண்டார். இதையறிந்த கோபன்ன தமக்குத் தரிசனம் கொடுக்காமல், தானிஷாவிற்கு மட்டில் வேடம் பூண்ட தரிசனம் கொடுத்து மறந்ததை நினைத்துக்கிலேசமடைந்து தானிஷாவுடன் பத்திரகிரிமலைக்குச் சென்று, சன்னிதானத்தில் பிரார்த்தித்து நின்றார். இவ்விதம் மகம்மதிய தானிஷா தமது சன்னிதானம் வந்ததை அறிந்த கடவுள், மகம்மதியருக்குத் தம்மிடம் பக்தி உண்டாகும்படி தரிசனம் கொடுத்தார்

உடனே மகம்மதிய அரசர் ஹிந்து மதத்தில் விஸ்வாஸம் வைத்து ராமபக்தி செய்ய தலைப்பட்டார். இவ்விதம் அநேக மகம்மதியர்கள் ஹிந்துமதத்தை நாடினார்கள். அதில் கபீர் தாஸ் என்னும் மகம்மதியன் ஸ்ரீராமபக்தனாகி மகம்மதியருக்கு ஹிந்துமதத்தில் அபிமானமுண்டாகும்படி போதித்தார். இதுமுதல் கோலகொண்டா தானிஷாவிற்கு கோபன்னாவிடம் பக்தியுண்டாகி அவர் தாசில் வேலையிலிருக்கும்வரையிலும் தாராளமாய் பணத்தை தர்மத்தில் செலவழிக்கவும், அரண்மனையில் உத்தரவின்றி போகவும், வரவும் உத்தரவு செய்தார்.

இவ்விதம் உத்தரவு பெற்ற இராமதாஸர் ஒருநாள் தானிஷாவின் அரண்மனைக்குப் போனகாலத்தில் தானிஷாவின் மகள் ஒரு அழகிய விக்கிரஹத்தை வைத்து விளையாடிக்கொண்டிருந்ததைப்பார்த்தார். அதின் விருத்தாந்தத்தை கோபன்ன விசாரித்ததில், டில்லி பாச்சாவின் தளகர்த்தராகிய மாலிக்காபர் இப்போதிக்குச்சுமார் 600 வருஷங்களுக்குமுன் தென்னிந்தியாவின் மீது படையெடுத்து இராமேஸ்வரம் வரையில் சென்று அவ்விடம் ஆண்ட பாண்டியர்களையும் ஹோயஸலேக்களையும் வென்று தமக்குக்கப்பம் கட்டும்படி செய்வித்து திரும்பி வருகையில் ஸ்ரீரங்கம் கோயிலிற் சென்று ஸ்ரீரங்கநாதர் விக்கிரஹத்தை எடுத்து வந்து தானிஷாவின் பெண்ணிற்கு விளையாட கொடுத்துப்போனதாய் அறிந்துகொண்டார். கோபன்ன மேற்படி விக்கிரஹத்தை தந்திரமாய் எடுத்து, ஸ்ரீரங்கம் வந்து, அதை மறுபடி பிரதிஷ்டை செய்து ஸ்ரீரங்கம் கோயில் மதிலில் அந்த விக்கிரஹம் போனதுமுதல் பிரதிஷ்டை செய்தவரையிலுமுள்ள விருத்தாந்தத்தை எழுதிவைத்திருக்கிறார். இதனால் பாண்டியர்களும் ஹோயஸலேக்களும் பலஹீனமடைந்து மகம்மதியரதிகார

த்திற்கு உட்பட்டுப்போனதாகவும், மகம்மதியர் தெற்கே படை எடுத்து அனேக அக்கிரமங்களைச் செய்திருப்பதாகவும் நமக்குத்தெரிகிறது.

2. **விஜயநகர ராஜ்யம்:**—மேற்கூறிய மகம்மதிய படை எடுப்பிற்குப்பிறகு, வடக்கே யாண்ட மகம்மதியரில் உட்சண்டை உண்டாகி பீஜபூர், கோலகொண்டா என்னும் இரண்டு மகம்மதிய அரசாட்சி ஏற்படுத்தப்பட்டன. இவை சென்னை ராஜதானியின் வடக்கெல்லையாக ஏற்பட்டன. இவ்விதமாய் நமக்குச்சமீபத்தில் மகம்மதிய அரசாக்ஷி வந்துவிட்டபடியால், அடிக்கடி அவர்கள் படையெடுத்து நமது தேசத்தை கெடுக்காதபடி, மைசூர் ராஜ்யத்தில் துங்கபத்ரா நதிக்கரையோரமாய் ஹம்பி என்னும் பட்டணத்தில் "விஜயநகர ராஜ்யம்" என்னும் ஹிந்துராஜ்யம் முற்கூறிய ஹோயஸலேக்களின் சிற்றரசர் ஒருவரால் ஸ்தாபிக்கப்பட்டது. இந்த விஜயநகர ராஜ்ய வம்சத்தார் சுமார் 300 வருஷம் நம்மையாண்டு மகம்மதியர் தெற்கே படையெடுக்காதபடி தடுத்தார். அப்போதும் தெற்கே பலஹீனமடைந்த பாண்டியர்கள் மதுரையில் ஆண்டார்கள். இவர்களை மேல்பார்வையிட 'நாயகர்' என்னும் ஒரு கவர்னரை மதுரையில் வைத்து, விஜயநகர அரசாக்ஷிக்கு உள்ளடங்கி ஆண்டுவரும்படி ஏற்படுத்தப்பட்டது. இம்மாதிரியே மைசூர், செஞ்சி, தஞ்சாவூரிலும் நாயகர்கள் விஜயநகரத்து அரசாக்ஷிக்கு அடங்கி ஆண்டார்கள். இந்த விஜயநகர ராஜ்யத்தை முதலில் ஹோயஸலேக்களும், பிறகு சாளுவர், துளுவர் வம்சத்தார்களும் ஆண்டார்கள். இதில் ஹோயஸலேக்கள் ஆண்டதை ஸ்ரீரங்கம் திருஆனைக்காவல், ரத்னகிரிமலையிலுள்ள சிலாலிகிதத்தாலும், சாளுவர் ஆண்டதை அந்த வம்சத்தைச் சேர்ந்த கோப்பதிம்மா அரசர் ஸ்ரீரங்கம் கோயில் மதில்களிலும்



ஸ்ரீரங்கம் தெற்கு ராய கோபுரம்

சாளுவசங்கம தேவமகாராஜா அம்பில் கிராமத்திலும் எழுதி வைத்திருக்கும் சிலாலிகிதத்தாலும் தெரிந்துகொள்ளலாம். துளுவர் ஆண்டதை அந்த வம்சத்தைச் சேர்ந்த பேர்பெற்ற கிருஷ்ண தேவராயர், தாம் ஆண்டகாலத்தில் திருப்பால் துறை கோயில் நிலங்களுக்கு வரியைத்தள்ளி மான்யமாக விட்டதாக அந்தக்கோயிலில் எழுதிவைத்திருக்கும் சிலாலிகிதத்தாலும் தெரிந்துகொள்ளலாம்.

3. **ஸ்ரீரங்கம் தெற்குராயர் கோபுரம்:**— துளுவர் ஆண்ட காலத்தில் **கிருஷ்ண தேவராயர்** என்பவர் ஸ்ரீரங்கம் வெளிப்பிராகாரத்தைக் கட்டிக்கோபுரத்தையும் கட்ட எத்தனித்தார். இது முடியுமுன் மகம்மதியருடன் சண்டையிடும்படி நேர்ந்ததால், முடிவுபெறவில்லை. கிருஷ்ண தேவராயரை ஜனங்கள் ராயர் என்று மரியாதையாகச் சொல்லுவது வழக்கம். ஆகையால் அவர் கட்டிய தெற்கு கோபுரத்தை "ராயர் கோபுரம்" என்று சொல்லி இப்போது ராய கோபுரம் என வழங்குகிறார்கள். இந்த ராயர் கோபுரத்தின் நீளம் 130 அடி, அகலம் 100 அடி, உயரம் 43 அடி. வாசற்படிமட்டும் 23 அடி. இது கட்டி முடிந்தால் சுமார் மலைக் கோட்டை உயரமாகும். இதின் சாமான்களில் சிலவற்றைக் கொண்டு விஜயநகரராஜாவின் மந்திரியாகிய சேஷராயர் என்பவர் ஸ்ரீரங்கம் கோயிலில் ஆயிரக்கால் மண்டபத்திற்கு எதிரில் தெற்கே ஒரு மண்டபம் கட்டினார். இதை இப்போது சேஷராயர் மண்டபம் என்கிறோம். இதில் வடபுறம் தூண்களில் சிங்கம், யானை, குதிரைகள் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. இதனால் ஆதிகாலத்திலும் சிற்பவேலைகள் நன்றாய் செய்யப்பட்டு வந்தனவென்று அறிகிறோம்.

VII. **நயகர் குடும்ப பொம்மைகள்:**—1. முற்கூறிய கதையால் சுமார் 300 வருஷங்களுக்குமுன் விஜயநகர

ராஜாக்கள் நம்மை ஆண்டதாக அறிந்தோம். இவர்களுக்குப் பின் நம்மை ஆண்ட அரசர்கள் இன்னாரென்று நமக்குத் தெரியவேண்டியது அவசியமல்லவா! ஸ்ரீரங்கம் கோயிலில் விமானப்பிராகாரம் மேல்புற மண்டபத்தில் வடகோடியில் நான்கு தந்தப்பொம்மைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இதை விசாரித்தால் ஜனங்கள் விஜயரங்க சொக்கநாத் நாயகர் குடும்பத்துப் பொம்மைகள் என்கிறார்கள். ஆனால் விஜயநகர அரசாக்ஷியில் மதுரையில் ஆண்ட பாண்டியருக்கு உதவியாக மேலதிகாரம் செலுத்த நாயகரை நியமித்திருந்ததாக நாம் முன்பு படித்தோம். அப்படியிருக்க திருச்சிராப்பள்ளிக்கு அந்நாயகர் வரவேண்டிய காரணமும், அவர்கள் சுயமாக ஆண்டதற்குக் காரணமும் நமக்குத் தெரியவேண்டியது அவசியம். அவை அடியில் கூறும் கதைகளால் நன்கு விளங்கும்.

2. மதுரை நாயகர் ஏற்படும் வருதல்:— விஜயநகர அரசாக்ஷிக்குப் பிரதிநிதியாய் மதுரையில் சுமார் 359 வருஷங்களுக்கு முன் விசுவநாத நாயகர் நியமிக்கப்பட்டார். இவரும் இவர் சந்ததியாரும் விஜயநகர அரசாக்ஷிக்கு அடங்கி "நாயகர்" என்னும் பட்டத்துடன் ஆண்டார்கள். ஆனால் அடிக்கடி வேறு நாயகர்களை நியமிக்காமல் இவர்களின் சந்ததியார்களே பாத்தியதை அடைந்து விஜயநகர அரசாக்ஷிக்கு அடங்கி ஆண்டார்கள். அப்போது நமது ஜில்லாவில் திருஆனைக்காவல் வழியாய்ச் செல்லும் பட்டணம் ரோட்டில், ஸ்ரீரங்கம், ராமேசுரம் போகும் பிரயாணிகளுக்கு திருடர் பயமில்லாமல் செய்யவேண்டிய கடமை தஞ்சாவூர் நாயகருக்கு விஜயநகரத்தரசரால் ஏற்படுத்தப்பட்டிருந்தது. தஞ்சாவூர் நாயகர் திருட்டைத் தடுக்கத்தகுந்த முயற்சி எடுத்துக்கொள்ள முடியாததால், மதுரை விசுவ

நாத நாயகர் தன்னுடைய வல்லம் கோட்டையைத் தஞ்சாவூர் நாயகருக்கு கொடுத்து, அதற்குப்பதிலாய்த் தஞ்சாவூர் நாயகருக்குச் சொந்தமான திருச்சி கோட்டையைத் தாம் அடைந்தார். இவ்விதமாய் திருச்சிக்கோட்டையை அடைந்தவுடன், மதுரையைவிட்டு இவ்விடம் வந்து அரண்மனை கட்டிக்கொண்டு விசுவநாத நாயகர் நம்மை ஆண்டார்; இப்போது திரிச்சி குஜிலியில் தாலூகா கச்சேரி வைத்திருக்கும் கட்டிடம் விசுவநாதநாயக்கரின் அரண்மனை. இவர் திருச்சி மலைமேல்கோட்டைகட்டி தெருவை உண்டாக்கினர். இதற்குப்பிறகு திருச்சிமலைக்கோட்டை எனப்பெயர் வந்தது. இவர் திரிச்சிபட்டணத்தைச் சுற்றி அகழும் மதிலும் கட்டி பட்டணத்தை பந்தோபஸ்து செய்தார். இப்போது அகழ் தூர்க்கப்பட்டு, புல்வார்டுரோடு அதின்பேரில் போடப்பட்டிருக்கிறது. பட்டணத்தில் காற்ரோட்டம் உண்டாகும்படி முனிசிபாலிட்டியார் கோட்டை மதில்களை இடித்துவிட்டார்கள் தெப்பக்குளம் வெட்டியதும் விசுவநாத நாயகரே, இவர் திரிச்சி ஜில்லாவில் திருட்டைத் தடுக்க விஜயநகரத்தாரால் எற்படுத்தப்பட்ட உடையார்பாளையம் ஜமீன்தாருக்கு சில நாட்டைவிட்டு அவைகளின் வரும்படியை அடையும்படிக்கும், அதற்குப் பதிலாய் யுத்தகாலத்தில் சர்க்காருக்கு உதவி செய்யும்படிக்கும், திருட்டைத்தடுக்கும்படிக்கும் எற்பாடு செய்தார். விசுவநாத நாயகருடைய பாளையம் (பட்டணத்திற்கு வடகிழக்கு பாகத்தில் வைக்கப்பட்டிருந்தது. அந்தஇடத்தை இப்போதும் சர்க்கார் பாளையமென்கிறோம்.

3. **ஜயநகர ராஜ்யம் க்ஷீணதசை:—நாயகர் சுய அரசாட்சி:**—முற்கூறிய விசுவநாத நாயகருடைய வம்சத்தில் திருமலை நாயகர் என்ற ஒருவர் ஆண்டார். இவர் காலத்திற்கு சற்று முன்னே, விஜயநகர அரசர் தலைக்

கோட்டை என்னுமிடத்தில் மகம்மதியரால் தோல்வியடைந்து, முதலில் பெனுகொண்டாவிலும் பிறகு சந்திரகிரியிலும் வசித்தார்கள். ஆகையால் திருமலே நாயகர் விஜயநகர அரசருக்கு அடங்கி ஆளாமல் சுயமாயாண்டார். ஆனால் "ராஜா" என்னும் பட்டம் வைத்துகொள்ள ஆசைப்படாமல் "நாயகர்" என்னும் பட்டம் போதுமென்று திருப்தியோடிருந்தார். இவர் மட்டும் மதுரையிலிருந்து நம்மை ஆண்டார். இவர் மட்டும் மதுரையில் தன் பேர் எப்போதும் விளங்கும்படி "மால்" ஒன்று கட்டி அதில் வசித்தார். அதை இப்போதும் "திருமலேநாயகர்மால்" என்று சொல்லுகிறோம். இவர் காலத்தில், நமது ஜில்லாவில் துரையூர், கடவூர், மருங்காபுரி ஜமீன்கள் ஏற்பட்டன.

**VIII. மங்கம்மாள் கொலுமண்டபம்**—1. திருமலே நாயகர் பேரன் சொக்கநாத நாயகர். இவர் மனைவி மங்கம்மாள். இவளுடைய பேரன் விஜயரங்க சொக்கநாத நாயகர். இவர் தகப்பனூர் இறக்கும்போது குழந்தையாயிருந்தபடியால் இவர் பாட்டியாகிய மங்கம்மாள் இவருக்குப் பதிலாக யாண்டாள். இவள் அநேக கோயில் திருப்பணிகள் செய்தாள். நிழலேத்தரும் விருக்ஷங்கள் வைத்து ரஸ்தாக்கள் போட்டாள், உய்யக்கொண்டான் பாலமிடிந்துபோனதை புதுப்பித்ததாகவும் அப்பாலத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ஸ்ரீரங்கம் காவேரிக்கரையில் ஜனங்கள் ஸ்நானம் செய்து மழை வெயிலுக்கு தங்கும்படி ஒரு மண்டபம் கட்டினள். இதை இப்போதும் "அம்மா மண்டபம்" என்கிறோம். இந்த அம்மா அரசாக்ஷி செய்ய விசுவநாதநாயகரின் அரண்மனைக்கு வடக்கில் ஒரு மால் கட்டி அதிலிருந்து நகாருடிகளே விசாரணை செய்தாள். இதை இப்போதும் "மங்கம்மாள் ஆடியன்ஸ் ஹால்" அதாவது மங்கம்மாள் கொலுமண்டபம் என்று சொல்கிறோம். அந்த மண்டபத்தின் முன்புறச்சுவ

ரில் இவள் கட்டியதென்று எழுதிவைத்திருக்கிறது. மணப் பாறையிலும் ஒரு பங்களா கட்டியிருக்கிறாள். இந்த மங்கம் மாளாண்ட காலத்தில் டில்லி மகம்மதிய சக்கரவர்த்தியின் அதிகாரத்திற்குட்பட்டு ஆற்காடு நபாபிற்கு கப்பங் கட்டி ஆண்டாள்.

2. **விஜயரங்க சொக்கநாத நாயகர்:**—நாயகர் களில் கடைசியிலாண்டவர் விஜயரங்க சொக்கநாத நாயகர். இவருடைய குடும்பபொம்மைகளைத் தந்தத்தால் செய்து ஸ்ரீரங்கம் கோயிலில் வைத்திருப்பதாக முந்தி படித்தோ மல்லவா? இவர் ஸ்ரீரங்கம் கோயிலுக்கு அநேக திருப்பணி கள் செய்திருக்கிறார். அவைகளில் ரூ. 20,000 பொருமான தங்கக் குடம் ஒன்று, இது திருட்டுப்போனதாயும் மறு மடி கண்டு பிடித்து கோயிலில் கொடுக்கப்பட்டதாயும் உடையார்பாளையம் ஜமீன்தார் அந்தக்குடத்தில் எழுதி வைத்திருக்கிறார். இவர் ஸ்ரீரங்கம் கோயிலுக்குத் தன் குடும்பத்துடன் வந்து தரிசித்துப்போவது வழக்கம். ஆகை யால் இவர் இறந்தபிறகு இவருடைய ஞாபகம் இப்போதும் இருக்கும்படி இவரைக் குடும்பசகிதமாய்த் தந்தபொம்மை களாகச் செய்து ஸ்ரீரங்கம் கோயிலில் வைத்திருக்கிறார். இ தனால் நாயகர் ஆண்டதைத் தெரிந்துகொண்டோம். விஜ யரங்க சொக்கநாத நாயகர் இறந்தவுடன் இவருக்குப்பிள்ளை யில்லாததால், இவர் மனைவி, பங்காரு திருமலை நாயகர் பிள் ளையை சுவீகாரம் செய்துகொண்டு தான் பிரதிநிதியா யாண் டாள்.

---

## IX. பொன்மலை

1. **நாயகர் ராஜ்யம் க்ஷீணதிசை:—மகம்மதி யர் ஆளுகை**—நாயகர் அரசி மீனாக்ஷி யாண்டகாலத்தில் சுவீகாரக்குழந்தையின் தகப்பனார் பங்காரு திருமலை நாய கர் தனக்கு ராஜ்யமுண்டென்று மீனாக்ஷியுடன் சண்டையிட்

டார். இவர்கள் ஆற்காடு நவாபிற்குக் கப்பம் கட்டியாண்டதால், நவாபை மத்தியஸ்தம் செய்யும்படி கேட்டுக்கொண்டார்கள். நவாபு தன் பிள்ளையையும் தனது தளகர்த்தரான சண்டாசாகிபையும் வழக்கைத் தீர்க்க அனுப்பினர். பூனைகளின் வழக்கைக் குரங்கு தீர்த்ததுபோல், இருவரையும் ஏமாற்றிக்கொன்று தான் திரிச்சியை யடைந்தார். இவ்விதமாய் நாயகர் அரசாட்சி போய் மகம்மதியர் ஆளுகை வந்தது. இம்மகம்மதியர் சுமார் 66 வருஷம் ஆண்டார்கள். இவர்களுக்குப் பிறகு இன்றுவரையில் 100 வருஷங்களாக நமது கருணை பொருந்திய இங்கிலீஷ் கவர்ன்மெண்டார் ஆளுகைக்கு அடங்கி சகல நன்மைகளைப் பெற்றுச் சுகித்திருக்கிறோம். ஆனால் மகம்மதியராண்ட விதமும் அவர்கள் செய்த அக்கிரமங்களும், அவர்கள் தொலைந்து நமது இங்கிலீஷ் கவர்ன்மெண்டார் வந்த விதமும் உங்களுக்குத் தெரியவேண்டியது அவசியமாகையால் அவற்றை அடியிற் கூறும் கதையால் தெரிந்துகொள்ளலாம்.

---

## மகம்மதியர் ஆண்ட விதம்.

2. மேற்கூறிய கதைகளால் ஆதி முதல் சோழர்கள், பல்லவர்கள், மறுபடியும் சோழர்கள், பாண்டியர்கள், ஹொயஸலேக்கள், விஜயநகரத்தரசர், நாயகர்களுமாக நம்மையாண்டபிறகு மகம்மதியர் ஆளுகைக்கு உட்பட்டோம். இவர்கள் ஹிந்துமத விரோதிகளான மகம்மதியர். இவர்கள் காலத்தில் நாம் பட்ட கஷ்டங்கள், மானபங்கங்களைச் சொன்னால் கேட்போர் நடுங்குவார்கள். திரிச்சியில் ஏராளமான பள்ளிவாசல்களை கட்டியிருக்கிறார்கள். இவர்கள் ஹிந்துக்களின் கோயில்களை இடித்து விக்ரகங்களைக்கொண்டு மதில்களைக் கட்டியிருக்கிறார்கள். திருஷ்டாந்தமாக பொம்பலூர் தாலூகா ரஞ்சங்குடியில் ஒரு மகம்மதிய பாளையக்காரன் கோயில்களை யிடித்த சாமான்களைக்கொண்டு கோட்டை கட்டியிருக்கிறான். திருச்சியில் நாதர்ஷா பள்ளிவாசல் ஒரு

சிவன் கோயில். இக்கோயிலேயே பள்ளிவாசலாக்கிச் சிவலிங்கத்தின்மேல் இப்போதும் விளக்கை ஏற்றிவருகிறார்கள். இவர்கள் காலத்தில் ஹிந்து ஸ்திரீகள் வெளியில் வந்தால் மானபங்கம் செய்துவிடுவார்கள். குடிகளிடத்தில் வரி வசூல் செய்வது அதிகக்கடுமை. கிராமங்களைக் குத்தகையாக விட்டு விடுகிறது. குத்தகைக்காரன் தன்னிஷ்டப்படி அதிகப் பணம் வசூல் செய்துகொள்ளுகிறது. இம்மாதிரியான கஷ்டங்கள் இப்போது 113 வருஷங்களாகக் கிடையா. முன்பு நீங்கள் சண்டாசாகிப் என்னும் நவாபின் தளகர்த்தன் திரிச்சியைக் கைப்பற்றினதாகப் படித்தீர்களல்லவா? அவன் எவ்விதமாய்த் தொலைந்தான் என்பது பின்வரும் கதையால் விளங்கும்.

3. **கர்னுடக சண்டைகள்:**—முன்படித்த சண்டாசாகிபு திருச்சியைக் கைப்பற்றிக்கொண்டு ஆற்காட்டிற்குப்போய் நவாபைக்கொன்று, தான் ஆற்காடு நவாபாக ஏற்படுத்திக்கொண்டான். நவாபின் பிள்ளை மகம்மதாலி திருச்சிக்குத் தப்பியோடி திருச்சி நவாபாகதான் ஏற்படுத்திக்கொண்டான். மகம்மதாலி திரிச்சியில் குளிசியின் தென்புறம் ஒரு அரண்மனையும் வடபுரம் ஒரு பள்ளிவாசலும் கட்டி இவ்விடம் வசித்தார். ஆகையால் ஆற்காட்டிலிருந்த சண்டாசாகிப் புதுச்சேரியிலிருந்த பிரான்சுக்காரர் துணைகொண்டு திரிச்சியை முற்றுகை போட்டான். திரிச்சியிலிருந்த மகம்மதாலி சென்னப்பட்டணத்திலிருந்த இங்கிலீஷ் துணையை நாடினர். இங்கிலீஷ் கம்பெனிக்காரர் சம்மதித்து திரிச்சிக்கு சுவல்ப சேனையை மகம்மதாலியின் பந்தோபஸ்திற்காக அனுப்பினர்கள். திரிச்சியில் பிரான்சுக்காரர் பலமாயிருந்தபடியால் இங்கிலீஷ்காரர் சேனை மகம்மதாலியைக் காப்பற்றச் சக்தியறறிருந்தது. இக்காலத்தில்

இங்கிலீஷ்காரர்களுக்கு ஒன்றும் தோன்றாமல் மயங்கினார்கள். அப்போது ராபர்ட் கிளைவ் என்னும் வாலிபன் இங்கிலீஷ்காரரிடத்தில் குமாஸ்தா உத்தியோகத்திலிருந்தான். இவன் தான், பிரான்சுச் சேனையை ஜெயித்து மகம்மடாலிக்கு ஆற்காடு நவாபு பட்டம் கட்டுவதாயும் தன்னிஷ்டப்படி செய்யவும் நடக்கவும், சுவல்ப சேனையை கொடுக்கும்படிக்கும் கேட்டுக்கொண்டான். அம்மாதிரியே பெற்றுக்கொண்டு முதலில் ஆற்காட்டை முற்றுகைபோட்டான். திரிச்சியிலிருந்த சண்டாசாகிப் ஆற்காட்டை மீட்க விரைந்து சென்றான். ராபர்ட் கிளைவ் தைரியமாய் ஆற்காட்டை கைப்பற்றிச் சண்டாசாகிப்பை எதிர்த்து திரிச்சிக்குச் சென்றார். முதலில் ரஞ்சங்குடியில் தோல்வியடைந்தபோதிலும் ராபர்ட் கிளைவ் ஊட்டாத்தூரில் ஜயம் பெற்று சமயவரத்திலிருந்து கொண்டு வடக்கேயிருந்த பிரான்சு பட்டாளம் திரிச்சிக்குள் செல்லாமல் தடுத்தார் அக்காலத்தில் லால்குடியில் பிரான்சு பட்டாளம் தங்கியிருந்தது. இங்கிலீஷ்காரர் லால்குடியை பிடித்துக்கொண்டுபிரான்சுப் பட்டாளத்தை திரிச்சிக்குத் தெற்கே யோட்டிவிட்டு, புதுச்சேரியிலிருந்து புதுபலம் திரிச்சிக்கு வராமல், இங்கிருந்து தடுத்தார். (லால்குடி என்னும் பெயர் மேற்படியூரிலுள்ள கோயில் கோபுரம் சிவப்பாயிருந்தமையால் துலுக்கரால் இடப்பட்டது. இவ்வூரின் இயற்கைப்பெயர் **திருத்தவததுறை**.) அப்போது சண்டாசாகிப் ஸ்ரீரங்கத்திலிருந்தான். ராபர்ட் கிளைவ் ஸ்ரீரங்கத்தைப் பிடித்துக்கொண்டு சண்டாசாகிப்பைக் கொன்று பாக்கியிருந்த பிரான்சுப் பட்டாளத்தையும் திரிச்சிக்குத் தெற்கே யோட்டிவிட்டுத் தான் திரிச்சிக்குச் சென்று மகம்மடாலியை ஆற்காடு நவாபாகச் செய்தார்.

4. **பொன்மலே:**—முன் சொல்லியபடி ராபர்ட் கிளைவினால் திரிச்சிக்குத் தெற்கே துரத்தப்பட்ட பிரான்சுசேனை திரிச்சிக்குத் தென் கிழக்கே 3மைல் தூரத்தில் ஒரு குன்றின் பக்கத்திலிருந்துகொண்டு இங்கிலீஷ் சேனையுடன் சண்டை செய்தது. இரண்டு மூன்றுநாள் சண்டைசெய்து கடைசியில் அக்குன்றைவிட்டுத் திடீரெனத் துறத்தப்பட்டது. பிற

கு அக்குன்றிற்கு வரவில்லை. சண்டை முடிந்தது. இங்கிலீஷ்காரர் ஜயமடைந்து மகம்மடாலியை ஆற்காடு நவாபாக ஏற்படுத்தினார்கள். முற்கூறிய குன்றைச் சுற்றிலும் சண்டைக்குப் பிறகு சரளை வெட்டியவர்களுக்குப் பொன் நாணயங்கள் அகப்பட்டன. இந்நாணயங்கள், அவ்விடம் சண்டையிட்டுத் தங்கியிருந்த பிரான்சு சைன்னியத்தால் புதைத்து வைக்கப்பட்டன வென்றும், திடீரென்று அவ்விடம் விட்டு சேனை துரத்தப்பட்டதால், எடுக்காமல் விடப்பட்டனவென்றும், இவைகள் மண் வெட்டியவர்களுக்குக் கிடைத்திருக்க வேண்டுமென்றும் நமக்குத் தெரிகிறது. இவ்விதமாய் இக்குன்றின்பக்கம் பொன் அகப்பட்டதால் இதைப் பொன்மலை எனச் சொல்லலாயிற்று. பிறகு நமது கவர்ன்மெண்டார் இக்குன்றைச் சோதித்துப் பொன்நாணயங்களை யெடுத்துவிட்டார்கள்.

---

## மகம்மடாலியின் ராஜ்யம்

## இங்கிலீஷ் கம்பெனிக்காரர் அடைதல்.

5. முற்கூறிய கர்னாடக சண்டை முடிந்த பிறகு மகம்மடாலி ஆற்காட்டிற்கு நவாப்பாகித் திரிச்சியைச் சேர்த்துக் கொண்டு ஆண்டார். இவ்விதம் மகம்மதியர்க்கு உட்பட்டு 66 வருஷங்கள் வரைக்கும் ஆளப்பட்டோம். பிறகு நவாபின் பிள்ளை சரிவர ஆளாததாலும், மைசூர் இராஜனுடன் இங்கிலீஷ்காரருக்கு விரோதமான ரகசியக் கடிதப்போக்கு வரவு வைத்திருந்ததை கண்டுகொண்டதாலும் இங்கிலீஷ் கம்பெனிக்காரர் செய்தவுதவிக்கு வாக்களித்தபடி பொருள் கொடுக்கச் சக்தியற்றுப்போனதாலும், இங்கிலீஷ்காரர் நவாபிற்குப் போதுமான பென்ஷன் கொடுத்துத் தாங்கள் 1801ம் வஷ திரிச்சி அரசாக்ஷியை யேற்றுக்கொண்டார். அது முதல் இன்று வரையில் இங்கிலீஷ்காரர்கள் ஆளுகைக்கு அடங்கி ஆளப்பட்டு வருகிறோம்.

## இங்கிலீஷ் கம்பெனிக்காரர் இங்கிலீஷ் கவர்ன்மெண்டாருக்கு ராஜ்யம் ஒப்புவித்தல்.

6. திருச்சி மணிக்கூண்டு:—திருச்சி ஜில்லா 1801ம் வருஷமுதல் 57 வருஷகாலம் ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் என்ற ஒருவித இங்கிலீஷ் அரசாக்ஷியால் ஆளப்பட்டது. 1858ம் வருஷம் நமது கருணை பொருந்திய விக்டோரியா மகாராணியவர்கள் கம்பெனியாரிடமிருந்து, நமது நாட்டையடைந்து அரசாண்டார்கள். ஹிந்துக்களுக்கு ஆளும் சக்தி எம்மட்டில் உண்டாகிறதோ அதற்குத் தக்கபடி உயர்ந்த உத்தியோகம் கொடுப்பதாக வாக்குத்தத்தம் செய்தபடி 1866ம் வருஷம் நமது திரிச்சி ஸ்ரீரங்கம் வாசிகள் இங்கிலீஷ்படிப்பில் விருத்தியாகி, ஆளும் சக்தியையடைந்திருப்பதாகக்கண்ட மகாராணி அவர்கள்மேற் கூறிய பட்டணங்களைக் குடியரசுபோல் ஆளும்படி உத்தரவு செய்தார்கள். இவ்வித அரசாக்ஷிக்கு "நகர சௌக்கிய பரிபாலன சபை" (Municipal Council) எனப் பெயர். ஜனங்களே, தங்களில் சிலரை நியமனம் செய்து அவர்களில் ஒருவரைத் தலைவராகவும் பாக்கி யிருக்கப்பட்டவர்கள் தலைவருக்கு உதவி செய்பவராகவும் நியமித்துக்கொண்டார்கள். இச் சங்கத்தார் திரிச்சிப்பட்டணத்தில் ஜனங்களிடம் தொழில் வரி, வீட்டுவரி முதலியவற்றைப் பெற்று, டவுன் முழுதும் ரஸ்தாக்கள் சுத்தம்செய்தும் இராத்திரியில் வெளிச்சம் போட்டும், தருமவைத்தியசாலைகள் சந்தைகள் கட்டியும் சுத்தமான தண்ணீர் உபயோகிக்கச் செய்தும் பிரதம வித்தையை (Primary Education) பரவச் செய்தும் வருகிறார்கள். இவர்கள் 1873ம் வருஷம் திரிச்சி டவுன் நடுவில் ஒரு தரும வைத்தியசாலையைக் கட்டி அதற்கு எதிரில் ரூ. 2,000 செலவுசெய்து ஒரு மணிக்கூண்டு கட்டியிருக்கிறார்கள். இது நகர சௌக்கிய பரிபாலன சபையார் கட்டியது. இதைப்பார்த்தவுடன் நமக்குச் சுய அரசாக்ஷியைக் கொடுத்த நமது கவர்ன்மெண்டாரை எப்போதும் ஞாபகப்படுத்துகிறது. நம்மையாண்ட விக்டோரியா மகாராணியார் 1901ம் வருஷம் உயிர் துறந்தார்.

# CHAPTER II.

விக்டோரியா மகாராணி இறந்தவுடன், அப்பெண்மணியின் மூத்த குமாரராகிய எட்வர்ட் VII என்னும் நமது சக்கரவர்த்தி நம்மை 9 வருஷம் ஆண்டார். இவர் நமது திரிச்சி ஜில்லாவிற்கு வந்த காலத்தில் இவர் வரவு நமக்கு எப்போதும் ஞாபகத்திலிருக்க திரிச்சி மணிக்கூண்டிற்கு சமீபத்தில் ஓர் வளைவுகட்டப்பட்டிருக்கிறது. இவர் 1910ம் ௵ மேமீ இறந்தார். இப்போது இவருடைய குமாரர் ஜியார்ஜ் V என்பவர் நம்மை ஆளுகிறார். சக்கரவர்த்திக்கு தலைநகர் ஐரோப்பாகண்டத்தில் இங்கிலாண்டுத்தீவில் 'லண்டன் என்னும் நகரம். நமது சக்கரவர்த்திக்கு எல்லாக்கண்டங்களிலும் நாடுகளுண்டு அவற்றில் நமது இந்தியாதேசமொன்று. தாமே நேரில் ஆங்காங்குச்சென்று ஆட்சிசெய்தல் முடியாதாகையால் தமக்கு பதிலாய்ப் பிரதிநிதியை நியமித்து, தம்மைப்போல் சகல அதிகாரத்துடன் சட்டதிட்டங்களுக்கு அடங்கியாளும்படி அனுப்புகிறார். நமது இந்தியாவிற்கு ராஜபிரதிநிதியை ஏற்படுத்தி அவருக்குக்கீழ் நான்கு மாகாணங்களாகப்பிரித்து ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒரு கவர்னரை நியமித்திருக்கிறார் ராஜப்பிரதிநிதி டில்லியிலிருக்கிறார். அவர் தமது மாகாணங்களின் நடவடிக்கைகளைக்கவர்னர் மூலமாய்த் தெரிந்து சக்கரவர்த்திக்கு வருஷாவருஷம் ராஜ்ய வரவு செலவு முதலியவற்றையும் தான் ஆண்டவிதத்தையும் தெரியப்படுத்துகிறார்.

இவ்விதமாக நமது சென்னைராஜதானிக்கு ஒரு கவர்னர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் தமது ராஜதானியை ஜில்லாக்களாகப்பிரித்து ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒரு ஐரோப்பிய கலெக்டர் என்னும் சிவிலியனை நியமித்திருக்கிறார். இவர் நமது ஜில்லாவை மூன்று டிவிஷனாகப்பிரித்துத் தமக்கு உத

விக்காக டிப்டி கலெக்டரை நியமித்திருக்கிறார். மறுபடியும் ஜில்லாவை எழு தாலூகாவாகப்பாகித்து ஒவ்வொரு தாலூகாவிற்கும் தாசில்தாரை எற்படுத்தியிருக்கிறார். ஒவ்வொரு தாலூகாவை அநேக கிராமங்களாகப்பிரித்து ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு அதிகாரியை வைத்திருக்கிறார். இந்த கிராம அதிகாரிக்குப் பணம் வசூல் செய்வதும், குற்ற விசாரணை செய்வதும், முக்கிய வேலைகளாகும். இவருக்கு உதவி செய்ய கணக்குப்பிள்ளை, தலையாரிகள். தோட்டிகள் உண்டு. கிராம முனிசீப் நியாய விசாரணை செய்யுமதிகாரி. இவருக்கு குற்ற விசாரணை செய்யவும் அதிகாரமுண்டு. அப்போது இவரைக் கிராம மாஜிஸ்டிரேட் எனச்சொல்வது. இவரே ரெவினியூ வசூல் அதிகாரி. சுருங்கச் சொல்லின் கலெக்டர் எப்படி ஜில்லாவிற்கோ அப்படியே இவர் கிராம அதிகாரி. ஆனால் சுவல்ப அதிகாரமுண்டு. இவருக்குமேல் நியாயவிசாரணைக்கு ஜில்லா முனிசீப், ஜில்லா ஜட்ஜ் இவருக்குமேல் குற்றவிசாரணை செய்ய சப்மாஜிஸ்டிரேட் டிப்டிகலெக்டர், கலெக்டர் அதிகாரிகளாகுவார். நமது ஜில்லா முழுவதையும் கலெக்டர் ஆண்டபோதிலும் இவருக்கு உதவி செய்ய பல டிபார்ட்மெண்டுகள் உண்டு. அவை கீழ் கூறப்படும்.

I. Revenue Department:—(வரிவசூல் டிபார்ட்மெண்டு) இதற்கு அதிகாரிகள் முற்கூறிய கலெக்டர், டிப்டிகலெக்டர், தாசில்தார், ரெவினியூ இன்ஸ்பெக்டர் கிராமமணியகாரர் இதற்குமேல் அதிகாரி ரெவினியூ போர்டு. (Revenue Board.)

II. Public Works Department:—பொது நன்மைகளாகிய ரோடுகள், பாலங்களைக்கட்டிப் போக்குவரத்திற்குச்சௌகரியங்களைச் செய்தலும், ஆறுகளிலும் கால்வாய்களிலும் வேண்டிய அளவு நீர்பாயச்செய்வதும் இந்த டிபார்ட்மெண்டின் முக்கிய வேலைகளாகும், இதின் அதிகாரிகள் இஞ்சினீர், சப் இஞ்சினீர், சூப்பர்வைசர், ஓவர்சியர், மேஸ்திரிகள்.

III Educational Department :—வித்தியா அபிவிர்த்தி டிபார்ட்மெண்டு. ஜில்லா முழுவதிலுமுள்ள குடிகள் எழுதப்படிக்கத் தெரிந்துகொள்ளும்படி பிரதம வித்தையை Primary Education கற்பித்தல் இதன் முக்கிய வேலை இதற்கு அதிகாரிகள் : இன்ஸ்பெக்டர், அஸிஸ்டண்ட் இன்ஸ்பெக்டர், சப் அஸிஸ்டெண்ட், சூபர்வைசர்களாகும்.

IV. Postal Department :—தபாலிலாகா. இது கிராமங்களிலுள்ள குடிகளின் க்ஷேமத்தைத் தூரதேசங்களிலுள்ளவர்கள் பந்துக்களுக்குத் தெரியப்படுத்தி பதில் அடையவும், அவசர சமாசாரங்களைத் தந்திமூலமா யடையவும், செய்யும்படி ஏற்பட்டது. இதற்கு அதிகாரிகள் சூபரின்டெண்ட், இன்ஸ்பெக்டர், போஸ்ட் மாஸ்டர்களாகும்.

V. Judicial Department :—நியாயபரிபாலன டிபார்ட்மெண்டு. இது கிராமங்களிலும், பட்டணங்களிலும் ஜனங்களுக்குள் ஏற்படும் விவாதங்களைத் தீர்த்து நியாயம் அளிப்பது. அதிகாரிகள் : ஜில்லா ஜட்ஜ், சப் ஜட்ஜ், ஜில்லா முன்சீப்பு, கிராம முன்சிப்பு.

VI. Sanitary and Medical Department :—சுகசௌக்கிய வைத்திய டிபார்ட்மெண்டு. இது ஜில்லா முழுவதிலும் வசிக்கும் ஜனங்கள் வியாதியால் கஷ்டப்படாதிருக்கவும், வியாதிகள் வாராமலிருக்கவும் தக்க ஏற்பாட்டைச் செய்வது. இதற்காக பல இடங்களில் தர்மவைத்தியசாலை வைத்து ஜனங்களைக் காப்பாற்றுகிறார்கள். அதிகாரிகள் : ஜில்லா சர்ஜியன் அஸிஸ்டெண்ட் சர்ஜியன், சப் அஸிஸ்டெண்ட் சர்ஜியன். அம்மைகுத்தலும் இதைச் சேர்ந்த வேலை.

VII. Salt and Abkari Department :—உப்பு இலாகா. இது, திருட்டு உப்பு சாராயம் செய்யாமல் தடுக்கவும் சமுத்திரக் கரையோரமாய் உப்பளங்களில் சேகரிக்கப்

படும் உப்பைக் களவுபோகாமல் பார்க்கவும் ஏற்பட்டது அதிகாரிகள் கமிஷனர், இன்ஸ்பெக்டர், அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர்.

VIII. F[illegible] D[illegible]ment :—காட்டு இலாகா. இது மலைகளிலும் சாகுபடிக்கு வராத பூபாகங்களிலுள்ள மரங்கள் முதலியவற்றைக் காப்பாற்றிக் காட்டை விர்த்தி செய்ய ஏற்பட்டது: ஜில்லா பாரஸ்டு ஆபீசர், ரேன்சர்கள்.

IX Police Dep[illegible]tment.—நகரக்காவல் இலாகா. முற்கூறியபடி கிராமங்களில் சில்லரைத் திருட்டுகள் நடக்காமல் தடுக்கத் தலையாரிகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதைப்போல, ஜில்லா முழுவதிலும் ஜனங்கள் சட்டதிட்டங்களுக்குட்பட்டு நடக்கும்படிக்கும், பெருங்கொள்ளை, கொலை, களவுகள், ராஜத்துரோக நடவடிக்கைகள் உண்டாகாமல் தடுக்கவும், குற்றவாளிகளை கண்டுபிடித்து அதிகாரியிடம் சேர்த்துதண்டிக்கவும். பெருங் கூட்டங்கள் கூடக்கூடிய சந்தைகள், திருவிழாக்களில் திருட்டுகள் உண்டாகாமல் தடுக்கவும், ஜில்லா முழுவதையும் பாதுகாக்கவும் ஏற்பட்டது. இதின் அதிகாரிகள் போலீஸ் சூப்பெரின்டெண்ட்டெண்ட், டிப்டி, சூப்பெரின்டென்டெண்டு, இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர், ஸ்டேஷன் ஹவுஸ் ஆபீஸர், கான்ஸ்டேபில்கள்.

X. Military Department :—இராணுவ இலாகா, நமது இராஜதானி முழுவதையும் திடீரென, வேற்று அரசர் பிரவேசித்து பிடித்துக்கொள்ளாமல் நமக்கு பந்தோபஸ்து செய்வதற்காக இது ஏற்பட்டது. சென்னை, திருச்சி, திருநெல்வேலி (பாளையங்கோட்டை) கொச்சி, நீலகிரி, திருவாங்கூர், மைசூர் முதலிய இடங்களில் பட்டாளங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இதற்கு அதிகாரிகள்.—அவல்தார், சுபேதார், கர்னல், ஜனரல், காப்டின். இவர்களுக்குமேல் அதிகாரி Commander-in-chief. கம்மாண்டர் இன் சீப். இவர் சென்னையிலிருக்கிறார்.

மேற்கண்ட ஒவ்வொரு டிபார்ட்மெண்டுகளுக்கும் மேலான அதிகாரிகள் சென்னையில் மாகாண கவர்னருக்குக் கீழிருந்து தங்கள் டிபார்ட்மெண்டின் அபிவிர்த்தி முதலியவற்றைக் கவர்னருக்குத் தெரியப்படுத்துவார்கள். சகலவித டிபார்ட்மெண்டின் அதிகாரிகளும் ஜில்லா முழுவதும் சென்று தங்கள் வேலைகளை முடிக்கவேண்டிய சகாயங்களை அந்தந்தக் கிராம முனுசிப்புகள் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். முற்கூறிய சகல டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கும் மாதா மாதம் ஜில்லா கஜானாவிலிருந்து கலெக்டர் சம்பளம் கொடுக்கிறார். வேலை செய்ய முடியாத வயது சென்ற உத்தியோகஸ்தர்களுக்கு வேலையில்லாமல் உபகாரச்சம்பளம் கொடுத்து வீட்டில் சௌக்கியமாயிருக்கச் செய்கிறார்கள். வேலைகள் சரிவரச் செய்யாமல் சட்டதிட்டத்தை மீறி நடந்து ஜனங்களை ஹிம்ஸிப்பவர்களைத் தண்டித்துக் காவலில் வைக்கிறார்கள். இந்த ஜில்லாவில் ஒரு சிறைச்சாலையும் (ஜெயில்) உண்டு.

இம்மாதிரி நமது ஜில்லா ஆளப்பட்டு வருகிறது. ஜில்லாக்கள் சேர்ந்த ராஜதானியிலிருந்து கவர்னரும் டிபார்ட்மெண்டு அதிகாரிகளும் முழு மாகாணத்தையும் ஆண்டுவருகிறார்கள். இவ்விதமாய் மாகாணங்களையும் இந்தியா முழுவதையும் டில்லியிலிருந்து ராஜ பிரதிநிதி சட்டதிட்டப்படி ஆண்டு சக்ரவர்த்திக்கு வருஷாவருஷம் தாம் ஆண்ட விபரத்தைத் தெரியப்படுத்துகிறார்.

இது வரையிலும் நாம் படித்த பாடங்களிலிருந்து ஆதி முதல் சோழர்கள், பல்லவர்கள், மறுபடியும் சோழர்கள் பாண்டியர்கள் ஹொய்ஸலேக்கள், விஜயநகர ராஜாக்கள், நாயகர் பாளையக்காரர்கள், மகம்தியர்கள் ஆகிய இவர்கள் ஆண்டு இப்போது எல்லாரைக் காட்டிலும் அதிக நன்மை புரிந்து நீதியாகச் சட்டதிட்டங்களை ஏற்படுத்தி நம்மை ஆள்கிறவர் இங்கிலீஷ்ராஜாங்கத்தார். இப்போது நம்மை ஆள்கிறவர் ஜியார்ஜ் V சக்ரவர்த்தி. நமது சக்ரவர்த்தி பல்லாண்டு வாழ்ந்து நம்மை ஆளும்படி கடவுளைப் பிரார்த்திப்பி காலத்த-
பட்டு யாத்திரை
வும்.

# CHAPTER III.

## பிரிட்டிஷ் (ஆங்கில) கவர்ன்மெண்டார்ல் நாம் அடைந்த நன்மைகள்.

1. **சககமனம்** அல்லது **உடன் கட்டை ஏறல் தடுக்கப்பட்டது**, ஆதிகாலம் தொட்டு நமது ஹிந்துக்களில் புருஷன் இறந்தவுடன் பெண்ஜாதியும், புருஷ பிரேதத்தின் பக்கத்தில் படுத்து நெருப்பு வைக்கப்பட்டு இறப்பது வழக்கம். இது பதிவிரதைகளின் தர்மம் என்று நமது சாஸ்திரங்களில் சொல்லியிருந்தபோதிலும், இப்படி இறப்பது தற்கொலை செய்துகொள்வது போலாகிறது. இப்படி எல்லா பெண்களும் உயிரைவிடத் தயாராக இருப்பார்களா? நீங்கள் யோசியுங்கள். எவளாவது சககமனம் செய்யாவிட்டால் ஜனங்கள் நிர்பந்தம்செய்து பாடையில் வைத்துக் கட்டி நெருப்புவைத்து வந்தார்கள். இது கொடுமையல்லவா? இதைத்தடுத்து நமது நாட்டுப்பெண்கள் சுகமாய் வாழும்படி செய்துவிட்டார்கள். யாராவது அப்படி சககமனம்செய்தாலும், செய்யும்படி உதவிசெய்தாலும் உபத்திரவம் செய்து சககமனம் நடத்தினாலும் அதற்குச் சம்பந்தப்பட்டவர்களை கடுமையாய் தண்டிக்கும்படி சட்டம் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

II. **தேசபாதுகாப்பு, சிற்றரசர் ஒற்றுமை:-** ஆதிகாலமுதல் நமது தேசத்தில் ஒரு சக்ரவர்த்தியும் அவருக்குக்கீழ் 56 தேசச் சிற்றரசரும் இருந்தார்கள். சக்ரவர்த்திக்கு சிற்றரசர் வருஷாவருஷம் கப்பம் கட்டிவரவேண்டும். இப்படிப் பணம் கட்டிவரும் சிற்றரசருக்கு ஒருவித நன்மை அவர் [illegible] ரூபத்தில் உதவியாவது சக்கரவர்த்தி செய்வதில்லை. [illegible]பம் கட்டும் சிற்றரசர் பலமடைந்து அடிக்கடி

சக்ரவர்த்தியுடன் சில சிற்றரசர் துணைகொண்டு சண்டையிட்டு ஜெயித்து தாங்களும் சக்ரவர்த்தியாக நினைத்தார்கள். இதனால் அரசரில் ஒற்றுமை இல்லாமல் போய் விட்டது. அதை அறிந்த பிறநாட்டு வேந்தர் நமது இந்தியாவின்மேல் படையெடுத்து சிற்றரசர் துணைகொண்டு அவர்களின் எதிரிகளைக்கொன்று பழிதீர்த்துக் கொண்டார்கள். இதனால் நாளடைவில் தாங்களும் கீழ்ப்பட்டுப் போனார்கள்; இவ்விதமாக நம்மை மகம்மதியர் படையெடுத்து ஜெயித்து ஆண்டார்கள். நமது இந்து அரசர்கள் மறுபடியும் மகம்மதியருக்கு கப்பம் கட்டும்படி நேர்ந்தது. ஆனால் எவ்வித சௌகரியமும் ஏற்படவில்லை. இப்படி நம்மை ஆண்ட துஷ்ட அரசர்கள் நமக்கு உபத்திரவம் செய்வதைக்கண்டு நமது கருணை பொருந்திய கவர்ன்மெண்டார் அக்கிரமம் செய்யாதபடி போதித்தும் பிடிவாதமாய் ஜீவஹிம்சை செய்வதைப்பார்த்து அவர்களை ஜெயித்து நம்மையும் நம்முடைய தேசத்து மன்னர்களையும் சட்டதிட்டப்படி சகல நன்மைகளைச் செய்து ஆண்டு வருகிறார்கள். சிற்றரசர்களுக்கு புத்தி சொல்லியும், பணம் உதவி செய்தும் தங்கள் தங்கள் நாட்டை நன்றாய் ஆளும்படி செய்துவருகிறார்கள். திடீரென்று வேறு துஷ்ட அரசர் படையெடுத்து நம்மையும் நமது நாட்டு சிற்றரசரையும்உபத்திரவப்படுத்தாமலிருக்க முக்கியமான இடங்களில் பட்டாளங்களை வைத்து பந்தோபஸ்து செய்து வருகிறார்கள்.

**திருட்டைத் தடுத்தல், நாட்டின் பந்தோபஸ்து:**—முற்காலத்தில் ஒருதேசத்தைவிட்டுவேறு தேசங்களுக்குப்போக அநேக கஷ்டங்கள் உண்டு. முதலாவது திருட்டுபயம். இதைத் தடுக்க விஜயநகர ராஜ்ய காலத்தில் ஜமீன்கள் சில முக்கிய இடங்களில் வைக்கப்பட்டு யாத்திரை

போகும் பிரயாணிகளுக்கு திருட்டு பயமில்லாமல் செய்யப்பட்டன. ஆனால் நாடுகளிலும் கிராமங்களிலும் சில்லரைத் திருட்டுகள் நடந்துவந்தபடியால் நமது உயிரும் பொருளும் எப்போதும் ஆபத்திலேயே இருந்தன. இப்போது நமது கவர்ன்மெண்டார் சிறிய கிராமங்கள்தோறும் போலீஸ் பந்தோபஸ்து செய்து, நமக்குமேற்கண்ட உபத்திரவமில்லாமல் சுகமாய் நாம் நமதுசொத்தை வைத்து இருக்கும்படி செய்திருக்கிறார்கள். அப்படி ஒருக்கால் திருட்டு நடந்தாலும் கண்டு பிடித்து நமது சொத்தை நமக்குத்திருப்பிக்கொடுப்பதுடன் திருடனையும் பிடித்து தண்டித்து மறுபடி அப்படி நேராதபடி செய்துவருகிறார்கள். முற்காலத்தில் சொத்து உள்ளவர் பூமியில் புதைத்துவைத்து பந்தோபஸ்து செய்துவந்தார்கள். திடீரென்று இறந்துவிட்டால் புதைத்துவைத்தது தன் சந்ததியாருக்குத் தெரியாமலே போயிற்று. இப்போது தாராளமாய் வீட்டில் வைத்துவிட்டு நாம் நினைத்த இடத்திற்கு பயமில்லாமல் போய் வரலாம்.

IV. சமாசாரப் போக்குவரத்திற்கு வேண்டிய சௌகரியங்கள்:—முற்காலத்தில் ஜனங்கள் தூர தேசத்திலுள்ள தங்கள் பந்துக்களுடைய க்ஷேமலாபங்களை அறிய விரும்புவது கஷ்டம். ஒரு வெட்டியானிடத்தில் ஒரு ஓலை எழுதி செலவிற்கு வேண்டிய பணத்தைக் கொடுத்து அனுப்புவது வழக்கம். இந்த வெட்டியான் போய் திரும்பி வருவதற்கு திருட்டு, துஷ்ட மிருகங்களின் உபத்திரவம், முதலிய பல அபாயங்கள் உண்டு. ஏழைகள் பாடோ வெகு கஷ்டம். தாமே போய்த் தெரிந்துவரவேண்டும். மகம்மதியர் அரசாட்சியில் சுமார் 400 வருஷத்திற்கு முந்தி ஷர்ஷா சக்கரவர்த்தி காலத்தில் குதிரைத் தபால் ஏற்படுத்தப்பட்ட

து. இதனால் பெரிய பட்டணத்திற்குப் பட்டணம் ஜனங்களின் கடிதத்தை எடுத்துச் சென்று பதில் கொண்டு வருவது வழக்கம். இப்போது 60 வருஷகாலமாய் 2000 மைல் தூரத்திலிருக்கும் நமது பந்துக்களுக்கு 7 நாளில் 6 பைசா செலவில் க்ஷேமசமாசாரத்தை அறியலாம். அவசரமாயிருந்தால் ரூ. 1 செலவழித்து தந்திமூலமாய் ஒரு மணி நேரத்தில் பதில் அடையலாம். ஏழைகள் 12 அணா செலவில் தந்திமூலமாய் பதில் அடையலாம். காசியில் நமது பந்து கஷ்டப்பட்டால் இவ்விடமிருந்து பணம் தந்தி மூலமாய் 1 மணி நேரத்தில் அனுப்பலாம். இது எவ்வளவு நன்மை பாருங்கள்! நகைகள், புடவைகள் முதலியவைகளையும் சுலபமாய் தபாலில் அனுப்பலாம். இவை முற்காலத்தில் கிடையா.

V. **போக்கு வரவு சௌகரியங்கள், ரோடுகள், பாலங்கள், ரயில், புகைக் கப்பல்:**— முற்காலத்தில் நமது தேசமுழுவதும் பெரும்பான்மை காடாக இருந்தபடியாலும், மலைகள் அடர்ந்து இருந்தபடியாலும், ஆறுகள் குறுக்கிட்டிருந்தபடியாலும், நமது இந்தியாவின் கிழக்கு, மேற்கு, தெற்கு, திசைகளுக்கு அப்பால் உள்ள தேசங்களுக்கு போகமுடியாமல் சமுத்திரத்தால் சூழ்ந்து இருப்பதாலும் ஒரு தேசத்து ஜனங்களும் சாமான்களும் வேறு தேசங்களுக்கு போவது கஷ்டமாயிருந்தது. இதனால் ஒரு நாட்டில் தெய்வீகமாய் மழை இல்லாமல் பஞ்சம் உண்டானால், சாமான்களை வரவழைப்பதற்குள் ஜனங்கள் சாகவேண்டியிருந்தது. இதைத் தடுப்பதற்கு சோழர் காலத்தில் நமது இந்தியாவின் வடகோடியிலிருந்து தென்கோடிக்கு பெரிய பட்டணங்களின் வழியாய் சாதாரண ரஸ்தா (ரோடு) ஏற்பட்டது. ஆனால் பெரிய ஆறுகளைத் தாண்ட பாலங்கள் இல்லை. சமுத்திர யாத்திரைக்கு பாய்மரக் கப்பல் அபூர்வமாய் ஏற்பட்டிருந்தது. இதனால் போக்கு வரத்து பல

—ஆபத்திற்கு உள்பட்டு கொஞ்சம் நடந்தது; இப்போது கிராமத்திற்கு கிராமம் ரோடுகளும் வாய்க்காலுக்குக்கூட பாலமும் கட்டியிருக்கிறார்கள். இதனால் மாட்டுவண்டிகள் குதிரைவண்டிகள் மூலமாய் போக்குவரத்து நடக்கிறது. கண்ட இடங்களில் ரயில் ஏற்பட்டிருப்பதால் ஒரு நாளில் 400 மைல் போக்குவரத்து நடக்கிறது. சமுத்திரங்களில் ஆபத்து இல்லாமல் போகவர புகைக்கப்பல்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகையால் ஒரு தேசத்தில் பஞ்சமுண்டானால் 30 நாளில் 5000 மைல் தூரத்திலிருக்கிற, வேறு கண்டங்களிலிருந்து சாமான்கள் வரலாம். ரயில் மார்க்கமாய் 7 நாளில் 1500 மைல் தூரத்திலிருந்து சாமான் வந்து சேர்ந்து விடுகிறது. இதனால் பஞ்சம் என்பது உண்டாவதுமில்லை. இருப்பதாக நமக்கு தெரிவதுமில்லை. விலையும் அளவும் தேச முழுவதும் ஒரே விதம். தூரதேசத்திலிருந்து வரும் சாமான்களுக்கு சற்று விலை அதிகம். நம்மிடத்தில் அதிகமாய் விளைந்த சாமான்களை வேறு தேசத்திற்கு அனுப்பி பணமாக்கலாம். முற்காலத்தில் இது முடியாது. வேண்டிய சாமானும் கிடைக்காது. அளவும் நிறையும் முற்காலத்தைப்போல் வேறுபடாமல் ஒரே விதம்.

VI. **வித்தியா அபிவிருத்தி:**—முற்காலத்தில் அரசிடத்தில் வித்தையை கவனிக்க ஒரு வித்வானிருப்பார்; இவர் பெரியபட்டணங்களில் மேன்குலத்தாருக்கு மட்டில் படிப்பை போதிக்க ஏற்பாடு செய்துவருவார். போதிக்கும் உபாத்தியாயருக்கு பூமியை மான்யமாக விடுவது வழக்கம். இது விளைந்தாலும் விளையாவிட்டாலும் இவர் போதிக்கவேண்டும். இதில் எத்தனைபேர்கள் படிக்கலாம்! பாருங்கள்

இப்போது சிறிய கிராமங்களில்கூட சர்க்கார் செலவில் பள்ளிக்கூடங்கள் வைத்து ஜாதி வித்தியாசமின்றி ஆண் பெண் பஞ்சமர்கூட படித்து முன்னுக்கு வரும்படி செய்திருக்கிறார்கள். பையன்களுக்கும் சம்பளமோ சுவற்பம். ஏழைகளுக்கு அதுவுமில்லை. உபாத்தியாயர்களுக்கு மாதம் போதுமான சம்பளமும் வருஷாவருஷம் அவர் திறமைகருத் தக்கபடி இனும் (கிராண்டும்) கொடுக்கிறார்கள். இதைகவனிக்க்மேலதிகாரிகள் வைத்து பிரதமவித்தையை எல்லோரும் அடையும்படி செய்கிறார்கள். சர்க்கார் சம்பளமில்லாமல் ஒருவர் பள்ளிக்கூடம் வைத்து நடத்தினலும் அவருக்குவேண்டிய பொருள் உதவி செய்கிறார்கள். பெரிய வித்வான்களாக ஹைஸ்கூல்களும் காலேஜுகளும் சில இடங்களில் சர்க்காரில் வைத்து நடத்துகிறார்கள். உதாரணமாக: சென்னப்பட்டணம், கும்பகோணம் ராஜமஹேந்தரவரம் முதலிய இடங்களில் சர்க்கார்காலேஜ் வைத்திருக்கிறார்கள். அவ்வளவு தூரம்போய் படித்து முன்னுக்குவர அதிக செலவழிக்க முடியாத ஏழைகள் படித்து வித்வான்களாக நமது ஜில்லாவில் சர்க்கார் உதவிபெற்று, பெருந்தொகையை கையைவிட்டு செலவழித்து பாதிரிமார் காலேஜ் வைத்து நடத்துகிறார்கள். இவ்விதமாக நமக்கு இகலோக பரலோக சாதகத்திற்கு முக்கிய காரணமான வித்தையை எல்லோரும் அடையும்படி செய்யும் நமது கவர்ன்மெண்டாரை நாம் தெய்வமாகவும் தாய் தகப்பனுகவும் பாவித்து நன்றி செலுத்தவேண்டும்.

VII. **சுய ஆட்சி சட்டதிட்டங்கள்:**—முற்காலத்தில் ராஜாங்க முறைமை அரசரும் சில வித்வான்கள் மட்டில் தேச முழுவதும் கவனித்து ஆண்டார்கள். இப்போது நமக்கு மேல் நாட்டாருடைய படிப்பும், ஞானமும் உண்டா

யிருப்பதால் நமது இந்தியர்களையே பெரிய உத்தியோகங்களில் வைத்து நம்மை ஆளும்படி சட்டதிட்டமேற்படுத்தியிருக்கிறார்கள். சிறிய கிராமங்களில் யூனியன் என்றும் பெரிய பட்டணங்களில் முனிசிபாலிடி என்றும் நமக்கே அதிகாரம் கொடுத்து மேல்விசாரணை சரிவர நடக்கிறதா என்று கவனித்து வருகிறார்கள். இது நாம் ஒரு தேசத்தை ஆள்வதைப் போல்தான் இவ்விதமான சுய அரசாட்சியைக்கொடுத்து ராஜ்யத்தில் பெரிய உத்தியோகம், ஜட்ஜ் கலெக்டர் முதலிய உத்தியோகங்கள் நமது இந்தியர் கையில் விட்டு ஆளும்படி பார்த்து வருகிறார்கள். சென்னை ராஜதானிக்கு கவர்னர்தான் பெரிய அதிகாரி. அவர் சபையில்கூட நம் இந்தியரில் ஒருவரை நியமனம் செய்திருக்கிறார்கள். இனி நமக்கு கிடைக்கவேண்டியது கவர்னர் வேலைதான். இதையும் நமது சக்ரவர்த்தி நாளடைவில் கொடுத்துவிடுவார். ஆனால் அது கஷ்டமானதும் பொறுப்புள்ளவேலை. ஆகையால்நாம் அதற்குத் தக்கபடியாக கொஞ்சநாள் செல்லும்; நம்மிடத்தில் அவ்விதவேலையை வகிக்க சக்தி வந்துவிட்டதென்று தெரிந்தால் அதையும் கொடுப்பார். மேற்கண்டவைகளைத் தவிர வேறுபல நன்மைகளை நமக்குச் செய்து, நாம் சுகமாயும் சுயேச்சையாயும் நிர்பயமாயும் நமது வாழ்நாளை கழிக்கும்படியாயும், இகலோகபரலோகசாதகங்களையடையும்படியும் குரு, தகப்பன், தாய்மார்களைபோல் நம்மை முன்னுக்குக் கொண்டுவர பாடுபட நமது சக்ரவர்த்தி நம்மிடமிருந்து எதை எதிர்பார்க்கிறார், தெரியுமா? அவரிடத்தில் நாம் விசுவாசம் வைத்து சட்டதிட்டப்படி அடங்கி இருப்பதைத் தவிர வேறு ஒன்றையும் எதிர்பார்க்கவில்லை. ஆகையால் நமது சக்ரவர்த்தி சாஸ்திரப்படி கடவுளின் அம்சமாகையால் நாம் கடவுளிடம் எப்படியிருக்கவேண்டுமோ அப்படியே அன்புபக்தியுடன் இருக்கவேண்டும். இவ்வித அர

சாக்ஷி நீண்ட காலமிருந்து நம்மை ஆளும்படி கடவுளை வணங்கவேண்டும்.

**VIII. துஷ்ட நிக்ரஹசிஷ்டபரிபாலனம்:—** சோழர் காலத்தில் கிராமத்திலும், பட்டணங்களிலும், பஞ்சாயத்துகள் நியமனம் செய்யப்பட்டு அவர் மெஜாரிடியின்பேரில் தீர்மானம் செய்யப்பட்டது. அப்பீல் அரசனிடம் செய்துகொண்டால் முக்கிய மந்திரி தீர்ப்பு செய்துவந்தார். அதிலும் ஒரே குற்றத்திற்கு ஜாதிக்குத் தக்கபடி தண்டனை. இப்போது ஜாதி வித்தியாசம் இல்லாமல் ஒரே குற்றத்திற்கு ஒரேவிதமான தண்டனை: அப்பீல் அதிகாரிகள்பலர். அதிலும் அதிசீக்கிரத்தில் முடிவாகும். இப்போது பஞ்சாயத்துவைத்து அவர்கள் அபிப்பிராயத்துடன்ஜட்ஜுகலந்தமுடிவுசெய்கிறார்கள்

**IX. சுகாதாரம்** —இதைப்பற்றி முற்காலத்தில் பட்டணங்களில் தவிர கிராமங்களில் கவனிக்கப்படவில்லை. வியாதிகள் வந்தாலும் வைத்தியர்களுக்கு பணம் கொடுக்க சக்தியுள்ளவர்கள் ஒருவாறு வியாதியினின்றும் தப்பலாம். பெரிய இரணங்கள் உண்டானால் சாகவேண்டியதே; இப்போதோ சில்லரைகிராமங்களிலும் வியாதிவராமல் சுத்தமாக இருக்கத் தக்கபடி சுத்தஜலம், நல்ல காற்று பெறும்படி சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கிறது. கண்ட இடங்களில் தர்ம வைத்தியசாலை வைக்கப்பட்டு செலவில்லாமல் மருந்துகள் கொடுக்கப்பட்டும் இரண வைத்தியம் செய்யப்பட்டும் வருகிறது. காலரா முதலிய தொத்து வியாதிகள் ஆதிகாலத்தில் உண்டானால் கிராமக்கணக்காய் இறந்துவந்தார்கள் இப்போது அதிகபணம் செலவழித்து மருந்துகள் கொடுத்து வியாதியை தடுத்துவருகிறார்கள். அதுவன்றி வியாதியே தலையெடுக்கவொட்டாமல்தடுக்க பலவிதிகளை அனுஷ்டித்துவருகிறார்கள்

இவ்விதமாய்ச் சக்ரவர்த்தி நம்மை தன்னுயிர்போல் கருதி காப்பாற்றுவதால் அவரே நமது தாய் தகப்பன் என்னலாம்.

**X. பொருளையும உயிரையும் பந்தோபஸ தாய்க்காப்பாற்றுதல்:—** முற்காலத்தில் ஒருவன் பணக்காரனாக இருந்தால் ஒருவருக்கும் தெரியாமல் பணத்தைப் புதைத்துவைத்து பந்தோபஸ்துசெய்துவந்தான். ஒருக்கால் தெரிந்துவிட்டால் தீவட்டிக்கொள்ளைக்காரர்கள், எஜமானைக் கொன்று பொருளையும் வெட்டி எடுத்துப்போய்விடுவார்கள். அரசனுக்கும் தெரிந்துவிட்டால்கடன்கேட்பான். கொடுக்காவிட்டால் வலுவில் அபகரிப்பான். ஒட்டவும் முடியாது. உதாரணமாக, மொகலாய சக்ரவர்த்தி ஒரு வியாபாரியை பணம் கேட்டு கொடுக்காததால், அவனைக்கொன்று பொருளை அபகரிக்கத்தந்திரம்செய்தான். அதையறிந்து தப்பியோடிநமது கவர்ன்மெண்டாரிடம்அடைக்கலம்புகுந்தான். அவனைவிட்டு விடும்படி நமது கவர்ன்மெண்டாரை, மகம்மதிய சக்ரவர்த்தி கேட்டார். சிநேகமாயிருந்தபோதிலும் சரணமடைந்தவனை கைவிடமாட்டோம் என்றார்கள். இதனால் மகம்மதியருக்கும் நமது கவர்மெண்டாருக்கும் சண்டையுண்டாகிமுடிவில்மகம்மதிய சக்கரவர்த்தியைக்கொன்றுஅவர்நாட்டையாண்டுவருகிறார். இப்போது எங்குபார்த்தாலும்போலீஸ்பந்தோபஸ்து செய்திருப்பதால்,பொருளை வீட்டில் வைத்துவிட்டு நினைத்தவிடம் போகலாம. அதிக திரவியமிருந்தால் சர்க்கார் வசம் ஒப்பிவித்தால் வட்டிபோட்டு கேட்கும்போது வட்டியையும் முதலையும் கொடுக்கிறார்கள். ஏழைகளும் ரூ. 0-4-0 கொடுத்தால் "Savings Bank" சேவிங்பாங்கில் எடுத்துக்கொண்டு ஒருவித செலவில்லாமல், வட்டியுடன் கேட்கும்போது கொடுக்கிறார்கள். நாம் இறந்தாலும் நமது சந்ததியார் அடைய

லாம். முற்காலத்தில் ஒருவருக்கும் தெரியாமல் பூமியில் புதைத்து வைத்தவன் இறந்தால் அவன் சந்ததியாருக்கும் தெரியாமல், பெரியமனுஷன் பிள்ளை உடனே ஏழையாகி வந்தான் இப்போது நாம் தைரியமாய் வெளியே போகவும் பொருளை வைத்துக்கொள்ளவும் தக்க ஏற்பாடு செய்திருக்கும் நமது சக்ரவர்த்திக்கு நாம் எவ்வளவு வந்தனம் செய்தாலும் போதுமா?

XI. **தர்மபரிபாலனம்:**—முற்காலத்தில் அரசர் சத்திரங்களைப்போட்டு ஏராளமாக பூமியைவிட்டிருந்தார்கள் அதின் வரும்படி ஏராளமாயிருந்தபடியால் ஜாதி வித்தியாசமின்றி எவரும் எத்தனை வருஷமாகிலும் சாப்பிடலாம்: இதினால் ஜனங்கள் சோம்பேரியாய் போய்விட்டார்கள். அதிதிகளுக்கும் வேலை செய்ய சக்தியற்றவர்களுக்கும் போடுவது நலம். திருவாங்கூர் ராஜ்யத்திலும் இம்மாதிரி நடந்துவந்தது. சமீபத்தில் ஒரு திவான் சோம்பேரிகளுக்குப்போடக்கூடாது என்றும் 3 வேளை மட்டில் சாப்பாடு ஒரு மாதத்தில் போடப்படும் என்றும் உத்திரவு செயதார், இதற்குப்பிறகு சத்திரத்தின் வரும்படி மீதியானதுமல்லாமல் இந்தச்சத்திரத்தைச் சேர்ந்த கிராமவாசிள் ஏழைகளாக இருந்தவர்கள் பூமியில் பாடுபட்டு இப்போது தனிகர்கள் ஆகிவிட்டார்கள். நமது ராஜாங்கத்தார்களும் முற்காலத்திய சத்திரங்களையும் கோவில்களையும் சரிவர கவனித்து பிரயாணிகளுக்குத் தங்க சத்திரங்களும் தண்ணீர்பந்தல்களும் வைத்து வேலைசெய்ய சக்தியற்றவர்களைக்காப்பாற்றி மீதிப்படும் திரவியத்தை சர்க்கார் விஷயத்திற்கு செலவு செய்து நம்மை காப்பாற்றி வருகிறார்கள்.

XII. **மதசம்பந்தம்:**—முற்காலத்தில் நமது ஹிந்து மதமே ராஜமதமாக இருந்தது. அரசர் பௌத்தரான காலத்தில் குடிகளையும் அம்மதத்தில் சேர்த்தார். இதற்கு உதா

ரணம் அசோக சக்கரவர்த்தி நீங்கள் படித்தபடி ஹிந்து மதத்தை விட்டு பௌத்த சமணமதத்தை அனுசரித்து குடிகளையும் அனுசரிக்கச் செய்தார்கள். இதனால் ஜனங்களில் ஹிந்து மதாபிமானிகள் ஒன்று சேர்ந்து பல்லவரை ஜெயித்து மறுபடியும் சோழராஜ்யத்தை ஸ்தாபித்தார்கள். மகம்மதியர் அரசாட்சியில் ஹிந்து மத கோவில்களை இடித்து இந்துக்களை மகம்மதிய மதத்தில் சேரும்படியும் இல்லாவிட்டால் தலைவரி கொடுக்கும்படியும் நிர்பந்தம் செய்தார்கள். இரண்டிலொன்றை அனுசரிக்காதவர்களைக் கொன்றும் வந்தார்கள். இப்போது நமது கவர்ன்மெண்டார் கிறிஸ்து மதத்தைச் சேர்ந்தவராகயிருந்தும் அவர்களின் மதத்தை அவரவர்கள் தாராளமாக அனுஷ்டிக்கலாமென்று எல்லாமத கோவில்களுக்கும் பொருள் உதவி செய்து, ஒரு மதஸ்த்தார் மற்றொரு மதஸ்த்தார் கொள்கைகளை அனுஷ்டிக்கவொட்டாமல் தடுக்காதபடி பந்தோபஸ்து செய்து வருகிறார்கள். இனி நமது மதம் கெடுமா? நாமே கெட்டாலொழிய அவர்கள் நம்மை இதர மதத்தில் சேர நிர்ப்பந்தம் செய்வதில்லை. நமது முன்னோர் இவ்விதம் செய்தார்களா?

XIII **கிஸ்தி வசூல்:**—சோழர் காலத்தில் விளைவதில் ஆறில் ஒரு பங்குவசூல் செய்து வந்தார்கள். ஆகையால் குடிகள் தங்களுக்கு தேவையான பூமியை சாகுபடி செய்து வந்தார்கள். இதனால் அரசருக்கு தன் ராஜ்ய பரிபாலன செலவு சரிவர செய்ய முடியாமலும், ராஜ்யத்தை பந்தோபஸ்து செய்ய பட்டாளம் வைக்க முடியாமலும் போனதுடன் ஜனங்களின் சுகாதாரச் செலவும், படிப்பிற்குச் செலவும் செய்ய முடியாமலிருந்தது. விளையாத காலத்தில் போக்கு வரத்து சௌகரியமில்லாததால் ஜனங்கள்